# காலச்சுவடு பதிப்பகம்

# புத்தகப் பட்டியல்

## 2011 - 2012

**தலைமை அலுவலகம்**

**669, கே.பி.சாலை**
**நாகர்கோவில் 629001**
தொலைபேசி: **91- 4652 - 278525**
கைபேசி: **9677778863**
மின்னஞ்சல்: **nagercoil@kalachuvadu.com**

**கிளை அலுவலகம்**

**பழைய எண் 130**
**புதிய எண் 257**
**திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை**
**சென்னை – 600005**
தொலைபேசி: **044 - 2844 1672,**
**4215 5972**
மின்னஞ்சல்: **chennai@kalachuvadu.com**

# வெளியீடுகள்


**முழுத் தொகுப்புகள்**

**கு. அழகிரிசாமி சிறுகதைகள்** 4
ப.ர்: பழ. அதியமான்

**மனக்குகை ஓவியங்கள்** 4
கட்டுரைகள், உரைகள், விவாதங்கள்
சுந்தர ராமசாமி;

**நாடகம்**

**அக்னியும் மழையும்** 4
கிரீஷ் கார்னாடின் ஆறு நாடகங்கள்
தமிழில்: பாவண்ணன்

**நாவல்**

**நவீன உலக கிளாசிக் வரிசை**

**சோபியின் உலகம்** 5
யொஸ்டைன் கார்டெர்; தமிழில்: ஆர். சிவகுமார்

**அஸீஸ் பே சம்பவம்** 5
அய்ஃபர் டுன்ஷ்; தமிழில்: சுகுமாரன்

**நவீன இந்திய கிளாசிக் வரிசை**

**அவஸ்தை** 5
யு.ஆர். அனந்தமூர்த்தி; தமிழில்: நஞ்சுண்டன்

**நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை**

**அம்மா வந்தாள்** 5
தி. ஜானகிராமன்;

**நாளை மற்றுமொரு நாளே . . .** 6
ஜி. நாகராஜன்

**18வது அட்சக்கோடு** 6
அசோகமித்திரன்

**நாவல்கள்**

**கலி புராணம்** 8
மு. தளையசிங்கம்

**கசகறணம்** 7
விமல் குழந்தைவேல்

**நிழலின் தனிமை** 6
தேவிபாரதி

**ஓதி எறியப்படாத முட்டைகள்** 7
மீரான் மைதீன்

**ஆத்துக்குப் போகணும்** 7
காவேரி

**பயணக் கதை** 7
யுவன் சந்திரசேகர்

**புகை நடுவில்** 7
கிருத்திகா

**கடவுளின் நண்பர்கள்** 8
கோகுலக்கண்ணன்

**கலங்கிய நதி** 8
பி.ஏ. கிருஷ்ணன்

**ஆனைவாரியும் பொன்குருசும்** 8
(குறுநாவல்)
வைக்கம் முகம்மது பஷீர்
தமிழில்: குளச்சல் மு. யூசுப்

**அம்மாவின் ரகசியம்** 6
(குறுநாவல்)
சுநேத்ரா ராஜகருணாநாயக
தமிழில்: எம். ரிஷான் ஷெரீப்

**சிறுகதைகள்**

**நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை**

**வாசனை** 9
சுந்தர ராமசாமி

**சிறுகதைகள்**

**உயிர்க்கொல்லி** 9
(பிரெஞ்சுச் சிறுகதைகள்)
தமிழில்: நாகரத்தினம் கிருஷ்ணா

**ராணியுடன் ஒரு தேநீர் விருந்து** 9
(வெல்ஷ் மொழிச் சிறுகதைகள்)
தமிழில்: அரவிந்தன்

**என் தாத்தாவுக்கொரு தூண்டில் கழி** 10
(சீனத்துச் சிறுகதைகள்)
தமிழில்: ஜெயந்தி சங்கர்

**லயோலா என்ற பெரும்பாம்பின் கதை** 10
(பதின்மூன்று அயல்மொழிச் சிறுகதைகள்)
தமிழில்: சுகுமாரன்

**காட்டில் நடந்த கதை** 9
(வங்காளச் சிறுகதைகள்)
விபூதி பூஷண் பந்தோபாத்யாய;
தமிழில்: புவனா நடராஜன்

**பலார்ஷாவிலிருந்து நாக்பூருக்கு** 10
(தெலுங்குச் சிறுகதைகள்)
ஸ்ரீவிரிஞ்சி; தமிழில்: கௌரி கிருபானந்தன்

**1945இல் இப்படியெல்லாம் இருந்தது . . .** 9
அசோகமித்திரன்

**விட்டில் – சமகால அரசியல் பகுப்பாய்வு** 10
இராகவன்

**நிலவுக்குத் தெரியும்** 11
சந்திரா இரவீந்திரன்

**வெள்ளி விரல்** 10
ஆர்.எம். நௌஸாத்

**உமா வரதராஜன் கதைகள்** 11
உமா வரதராஜன்

**கவிதைகள்**

**காடாற்று** 12
சேரன்

**கண்ணுக்குத் தெரியாததன் காதலன்** 13
குவளைக் கண்ணன்

**பெருநிலம்** 12
தீபச்செல்வன்

**யாரும் வராதபோது** 12
இலா

**பட்சியன் சரிதம்** 12
இளங்கோ கிருஷ்ணன்

**புதிய அறையின் சித்திரம்** 13
மண்குதிரை

**நீள் தினம்** 12
பூமா ஈஸ்வரமூர்த்தி

**இரவைப் பருகும் பறவை** 13
லாவண்யா

**'ஈ' தனது பெயரை மறந்துபோனது** 12
றஷ்மி

**ஆகவே நானும் . . .** 13
தேவேந்திர பூபதி

**சிவாஜி கணேசனின் முத்தங்கள்** 13
இசை

**நிலம் பிரிந்தவனின் கவிதை** 13
சுஜந்தன்

**எனது மதுக்குடுவை** 13
மாலதி மைத்ரி

### கட்டுரைகள்

**கனவின் யதார்த்தப் புத்தகம்** 14
இலக்கியம் மற்றும் பிற
அரவிந்தன்

**ஊரடங்கு இரவு** 14
(கட்டுரை நூல்)
பஷரத் பீர்; தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

**மார்க்ஸின் கொடுங்கனவு** 14
தனியுடைமையென்பது தொடர்கதையா?
டெனிஸ் கொலன்;
தமிழில்: நாகரத்தினம் கிருஷ்ணா

**பதிப்புகள் மறுபதிப்புகள்** 14
பெருமாள்முருகன்

**திரும்பிச் சென்ற தருணம்** 15
பி.ஏ. கிருஷ்ணன்

**கூண்டு: இலங்கைப் போரும்**
**விடுதலைப் புலிகளின் இறுதி நாட்களும்** 15
கார்டன் வைஸ்; தமிழில்: கானகன்

**லண்டன் உங்களை வரவேற்பதில்லை** 15
இளைய அப்துல்லாஹ்

**நொறுங்கிய குடியரசு** 15
அருந்ததி ராய்; தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

### ஆய்வுகள்

**தலித்துகளும் தண்ணீரும்** 18
கோ. ரகுபதி

மாமல்லபுரம்:
**புலிக்குகையும் கிருஷ்ண மண்டபமும்** 18
சா. பாலுசாமி

### அரசியல்

**அதிகாரத்தின் வாசனை** 17
கண்ணன்

**தமிழக அரசியல்** 17
காலச்சுவடு கட்டுரைகள் (2001 – 2011)
தொ–ர்.: கண்ணன்

**சாதியம்: கைகூடாத நீதி** 17
சமூக – அரசியல் விமர்சனக் கட்டுரைகள்
ஸ்டாலின் ராஜாங்கம்

### பத்திகள்

**அகவிழி திறந்து** 16
கண்ணன்

**பொன்னாலே புழுதி பறந்த பூமி** 16
சோலைக்கிளி

**வனாந்திரத் தனிப்பயணி** 16
(பத்தி – வாசிப்பு – நேர்காணல்)
இளம்பிறை

### வரலாறு

**வலை உணங்கு குருமணல்** 18
குருநகர் மக்கள் வரலாறு, பண்பாடு
மு. புஷ்பராஜன்

### வாழ்க்கை வரலாறு

**நீதி மறுக்கப்பட்ட கதை** 11
டாக்டர் பினாயக் சென்னின் போராட்டம்
மின்னி வைத்; தமிழில்: க. திருநாவுக்கரசு

### நினைவோடை

நினைவோடை:
**கு. அழகிரிசாமி** 11
சுந்தர ராமசாமி

### நேர்காணல்

**சுந்தர ராமசாமி நேர்காணல்கள்** 15
சுந்தர ராமசாமி

### ஆன்மீகம்

**சிவாலய ஓட்டம்** 19
ஒரு பாதயாத்திரையின் ஆன்மீக வரலாறு
அ.கா. பெருமாள்

### உணவு/மருத்துவம்

**அமுதே மருந்து** 18
அற்றது போற்றி உணின்
டாக்டர் எல். மகாதேவன்

### திரை

**திரைவழிப் பயணம்** 19
உமா ஷக்தி

### பிற

**தமிழர் உணவு** 19
(உணவு பற்றிய கட்டுரைகள்)
தொ–ர்: பக்தவத்சல பாரதி

**உண்மையும் பொய்யும்** 19
(கேள்வி – பதில்)
வைக்கம் முகம்மது பஷீர்;
தமிழில்: குளச்சல் மு. யூசுப்


### காலச்சுவடு அறக்கட்டளை வெளியீடு

**நெஞ்சில் ஒளிரும் சுடர்** 20
சுந்தர ராமசாமி பற்றிய நினைவுகள்
கமலா ராமசாமி

### தமிழியல்/காலச்சுவடு வெளியீடு

**பாலைகள் நூறு** 20
(சிறுகதைகள்)
அ. இரவி

# முழுத் தொகுப்பு



## கு. அழகிரிசாமி சிறுகதைகள்

ப.ர்: பழ. அதியமான்
ரூ. 875 (வி.பி.பி.யில் ரூ. 875)

கு. அழகிரிசாமி புதுமைப்பித்தன் பரம்பரை எழுத்தாளர். சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, பதிப்பு, நாடகம், கவிதை, நாவல் ஆகிய இலக்கிய வகைகளில் தனித் தன்மையுடன் செயல்பட்டவர்.


எளிய நடை, சித்தரிப்பின் லாவகம், உள்ளோடும் துயர இழை, மிதக் கும் நகைச்சுவை, கமழும் மண் ணின் மணம் என அழகுகள் கூடிவந்த கலை அழகிரிசாமியின் எழுத்து.

தமிழில் சிறுகதைக்காக சாகித்திய அக்காதெமி பரிசுபெற்ற முதல் எழுத்தாளர்.

இத்தொகுப்பில் அவரது எல்லாக் கதைகளும் கால வரிசையில் இடம் பெறுகின்றன. பல கதைகள் முதன்முதலாக நூலாக்கம்பெறுகின்றன. நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கு. அழகிரிசாமியின் இடத்தை இத்தொகுப்பு நிலைநிறுத்தும்.


## மனக்குகை ஓவியங்கள்

**கட்டுரைகள், உரைகள், விவாதங்கள்**
**சுந்தர ராமசாமி**
**ரூ. 875 (வி.பி.பி.யில் ரூ. 875)**



தமிழ் உரைநடைக்குப் பெரும் பங்களித்த சுந்தர ராமசாமி எழுதிய கட்டுரைகளின் முழுத்தொகுப்பு இந்நூல். அவர் தனிக் கட்டுரை நூல்களாக எழுதிய 'ந. பிச்சமூர்த்தியின் கலை: மரபும் மனித நேயமும்' மற்றும் சாகித்திய அகாதெமிக்காக எழுதிய 'கிருஷ்ணன் நம்பி' நூல்கள் நீங்கலாகப் பிற கட்டுரைகள், உரைகள், முன்னுரைகள், விவாதங்கள் அனைத்தும் இதில் இடம் பெற்றுள்ளன. சுந்தர ராமசாமியின் இலக்கியப் பார்வை யையும் சமூகப் பார்வையையும் முழுமையாக அறிந்துகொள்ள இத்தொகுப்பு இன்றியமையாதது.

# நாடகம்



## அக்னியும் மழையும்

கிரீஷ் கார்னாடின் ஆறு நாடகங்கள்
தமிழில்: **பாவண்ணன்; ரூ. 490 (வி.பி.பி.யில் ரூ. 490)**


சுதந்திரத்துக்குப் பிறகான இந்திய நாடக உலகில் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவர் கிரீஷ் கார்னாட். கன்னட நாடகங்களுக்கு இந்திய மேடைகளில் மட்டுமன்றி பல உலகநாடுகளின் மேடைகளிலும் கௌரவத்தையும் பாராட்டுகளையும் பெற்றுத் தந்தவர். வரலாறு, புராணம், நாட்டுப்புறக் கதைகளிலிருந்து தம் படைப்புகளுக்கான கருக்களை அவர் தேர்ந்தெடுத்துக்கொண்டாலும் அவை அனைத்தும் சமகால அரசியல், வாழ்வியல் பிரச்சனைகளையே முன்வைக்கின்றன. மொத்த நாடகத்தின் காட்சியமைப்பின் வழியாக அவர் உருவாக்கும் வசீகரம் மிகுந்த கவித்துவம் பார்வையாளர்கள் நெஞ்சில் அழுத்தமாகப் பதிந்துவிடும் தன்மையுடையது. கருத்துகளின் சுமையால் உரையாடலின் அழகு மங்கிவிடாதபடி மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கும் காட்சிகள் கார்னாடின் கலையுணர்வுக்குச் சான்றாகும். சமூகத்தில் தம்மைக் கட்டுப்படுத்தும் எல்லா அம்சங்களிலிருந்தும் விடுபட்டு மீறி நிற்கிற மன ஆற்றலும் போர்க்குணமும்கொண்ட பெண் பாத்திரங்கள் கார்னாடின் நாடகங்களில் இடம்பெற்றிருக்கிறார்கள்.


## காலச்சுவடு புக் கிளப்*

'காலச்சுவடு புக் கிளப்'பில் உறுப்பினராகுங்கள். உறுப்பினர் கட்டணம் ரூ. 1000. உறுப்பினர்கள் காலச்சுவடு பதிப்பக நூல்களை 25% சலுகையில் பெற்றுக்கொள்ளலாம். நூல்களைச் சென்னை அல்லது நாகர்கோவில் காலச்சுவடு அலுவலகங்களிலும் அனைத்துப் புத்தகக் கண்காட்சிகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக் கொள்வதானால் தபால் கட்டணம் இலவசம். புதிய வெளியீடுகள் பற்றிய தகவல்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கிளப் உறுப்பினர்களுக்கு ஓராண்டுக்குக் காலச்சுவடு இதழ்கள் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை உண்டு. (புகைப்படம் தேவையில்லை).

**நிபந்தனைகள்:** * இச்சலுகை தனி நபர்களுக்கு மட்டுமே, நிறுவனங்களுக்குப் பொருந்தாது. * இந்தியாவிற்குள் மட்டும். * உறுப்பினர் கட்டணம் திருப்பித்தரப்படமாட்டாது. * தபால் செலவு இலவசமாக குறைந்தது ரூ. 250 மதிப்புள்ள நூல்களைப் பெறவேண்டும்.

# நாவல்கள்




## சோஃபியின் உலகம்

(நவீன உலக கிளாசிக் வரிசை நாவல்)

**யொஸ்டைன் கார்டெர்**

தமிழில்: **ஆர். சிவகுமார்**

**ரூ. 500 (வி.பி.பி.யில் ரூ. 500)**

பதினான்கு வயதுச் சிறுமி சோஃபி அமுண்ட்சென்னுக்கு ஒருநாள் இரண்டு செய்திகள் கிடைக்கின்றன. இரண்டும் கேள்விகள். 'நீ யார்? இந்த உலகம் எங்கிருந்து வருகிறது?' இந்த இரண்டு கேள்விகளுக்குப் பதிலை யோசிக்கும் அந்த நொடியிலிருந்து சோஃபியின் உலகம் வேறாகிறது. காலங்காலமாக சிந்திக்கும் மனிதர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சோஃபியும் விடைதேடத் தொடங்கு கிறாள். அதன் வழியாக மனிதகுலத்தின் வரலாற்றை, தத்துவப் போக்குகளைப் புரிந்துகொள்கிறாள்.

இந்தப் பிரபஞ்சம், இந்த பூமி, இந்த வாழ்க்கை – இவை எல்லாம் எப்படி வந்தன என்ற கேள்வி ஒலிம்பிக் போட்டியில் யார் அதிகம் தங்கப் பதக்கங்களை வென்றார்கள் என்பதை விட முக்கியமானது என்பதை இளம் தலைமுறைக்கு வலி யுறுத்த எழுதப்பட்ட நூல் 'சோஃபியின் உலகம்'. தத்துவ நூலுக்குரிய இறுக்கமில்லாமல் ஒரு நாவலின் சுவாரசியத் தோடு எழுதப்பட்ட இந்நூலில் மனிதனின் ஆதிகால நம்பிக்கைகள் முதல் சாக்ரடீஸ், பிளாட்டோ வழியாக சார்த்தர் உட்பட்ட சான்றோர்களின் சிந்தனைகள்வரை அறிமுகமா கின்றன.

இதுவரை ஐம்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மூன்று கோடிப் பிரதிகளுக்குமேல் விற்பனையாகியுள்ளது. தொடர்ந்து உலகில் அதிக எண்ணிக்கையில் வாசகர்களைப் பெறும் நூலாகக் கருதப்படும் 'சோஃபியின் உலகத்தை' தெளிவான மொழியாக்கத்தில் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறது 'காலச்சுவடு பதிப்பகம்'.




## அவஸ்தை

(நவீன இந்திய கிளாசிக் வரிசை நாவல்)

**யு.ஆர். அனந்தமூர்த்தி**

தமிழில்: **நஞ்சுண்டன்**

**ரூ. 150 (வி.பி.பி.யில் ரூ.150)**

ஆளுமைமிக்க தனிமனித வாழ்க்கை ஒன்றினூடாகச் சமகால வாழ்வின் பல தளங்களை அளாவிச் செல்லும் புதினம் இது. அதீதங்களும் சராசரி களும் பிணைந்த மனிதர்களின் இயங்குவெளி இதன் களம். அரசியல் அதிகாரப் பின்புலம், அரச வன்முறை உள்ளிட்ட பலவும் வெகு இயல்பாகப் போகிறபோக்கில் வெளிப்படுகின்றன. மிகையான விவரணைகள் இன்றி அளவான விவரிப்புகளும் மனமொழியும் இணைந்து செல்லும் முறையில் எழுதப்பட் டுள்ளது. தமிழ் உரைநடை மரபுக்கு ஊறு நேராமலும் நாவலின் வாசிப்புத் தன்மை கூடும் வகையிலுமான மொழி பெயர்ப்பு.




## அஸீஸ் பே சம்பவம்

(நவீன உலக கிளாசிக் வரிசை நாவல்)

**அய்ஃபர் டுன்ஷ்**

தமிழில்: **சுகுமாரன்**

**ரூ. 50 (வி.பி.பி.யில் ரூ. 60)**

துருக்கிய நகரமொன்றின் மது விடுதியில் ஓர் இரவு நடக்கும் சம்பவம் அஸீஸ் பேயைக் கவனத் துக்குரியவனாக்குகிறது. அந்தச் சம்பவம் மட்டும் நடந்திராவிட்டால் அவன் வெறும் தான்தோன்றி, மூர்க்கன், சுயநலக் காதலனாக மட்டும் இருந்திருப்பான். எல்லாப் பெண்களும் தன்னால் காதலிக்கப்படுவதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்று செருக்குடன் திரிந்த அஸீஸ் பேயை மரியத்தின் மேலுள்ள மாளாக் காதல் தடுமாறச் செய்கிறது. வேலையைத் துறக்கச் செய்கிறது. பெற்றோரை இழக்கச் செய்கிறது. இஸ்தான்புல்லிலிருந்து பெய்ரூட்வரை சாகசப் பயணம் செய்ய வைக்கிறது. இருந்தும் மரியம் அவனுடைய காதலை உதாசீனம் செய்கிறாள். அஸீஸ் பே கற்றுக்கொள்ளும் பாடம்: தான் ஒரு கலைஞன், கலைஞன் மட்டுமே. இந்த உணர்வுதான் மது விடுதிச் சம்பவத்துக்கு அவனை இட்டுச் செல்கிறது.

சொல்லப்படும் கதையின் பொருளைச் சார்ந்தல்ல, சொல்லும் முறையைச் சார்ந்தே இலக்கியம் சமகாலத்தன்மை பெறு கிறது என்பதற்கான நவீன துருக்கி இலக்கிய உதாரணங் களில் ஒன்று இந்த நெடுங்கதை. அய்ஃபர் டுன்ஷின் படைப்பு இந்திய மொழிகளில் முதன்முதலாகத் தமிழில் வெளியா கிறது.




## அம்மா வந்தாள்

(நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை நாவல்)

**தி. ஜானகிராமன்**

ரூ. 130 (வி.பி.பி.யில் ரூ. 130)

'அம்மா வந்தாளை' மீறலின் புனிதப் பிரதியாகக் கொண்டாடலாம். சமூகம் நிறுவிக் காபந்து செய்து வரும் ஒழுக்க மரபைக் கேள்விக் குட் படுத்துகிறது நாவலின் கதை மையம். மனித உறவுகள் நியதி களுக்குக் கட்டுப்பட்டவை அல்ல. அவை உணர்ச்சிகளுக்கு வசப்படுபவை. இந்த இரண்டு கருத்தோட்டங்களின் ஈவாகவே மனித வாழ்க்கை இருக்கிறது; இருக்கும் என்பதை வலியுறுத்துகிறது கதை. இவ்விரு நிலைகளில் ஊசலாடுபவர் களாகவே முதன்மைப் பாத்திரங்கள் அமைகின்றன. இந்த ஊசலாட்டத்தை கலையாக்குகிறார் தி. ஜானகிராமன். ஆசாரங்களையும் விதிகளையும் மீறி மனிதர்களை நிர்ணயிப் பது அவர்களது உணர்வுகள்தாம் என்பதை இயல்பாகச் சொல்வதுதான் அவருடைய கலைநோக்கு. அந்த நோக்கம் உச்சமாக மிளிரும் படைப்புகளில் முதலிடம் வகிப்பது 'அம்மா வந்தாள்'.

# நாளை மற்றுமொரு நாளே . . .

(நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை நாவல்)

**ஜி. நாகராஜன்**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**




இது ஒரு மனிதனின் ஒரு நாளைய வாழ்க்கை. நீங்கள் துணிந்திருந்தால் செய்திருக்கக்கூடிய சின்னத்தனங்கள், நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால் காட்டியிருக்கக்கூடிய துணிச்சல், விரும்பியிருந்தால் பெற்றிருக்கக்கூடிய நோய்கள், பட்டுக்கொண்டிருந்தால் அடைந்திருக்கக்கூடிய அவமானம். இவையே அவன் வாழ்க்கை. அவனது அடுத்த நாளைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டாம்; ஏனெனில் அவனுக்கும் – நம்மில் பலருக்குப்போலவே – நாளை மற்றுமொரு நாளே !

## 18வது அட்சக்கோடு

(நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை நாவல்)

**அசோகமித்திரன்**

**ரூ. 175 (வி.பி.பி.யில் ரூ. 175)**




‘18வது அட்சக்கோடு’ வரலாற்று நாவல் – சுதந்திரத்துக்குப் பிறகான நிஜாம் அரசாங்கத்தில் நிகழ்ந்த வரலாற்றுப் பதிவுகளை எளிய இளைஞனைச் சுற்றிய தான நிகழ்வுகளின் கோர்வைகளாகப் பதிவு செய்கிறது.

தனிமனிதனில் இருந்து தேசம் நோக்கிப் பார்க்கும் ஒரு படைப்பாளியின் பார்வையில் பதிவு செய்யப்பட்ட ‘மைக்ரோ’ வரலாறு. இதில் தனி மனிதர்களின் அரசியல் கோட்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. அவர்களின் பொருளாதார நிலை பேசப்படுகிறது. தனிமனிதப் பார்வையில் நிஜாமினுடைய காரியதரிசிகளின் செயல்பாடுகள் அலசப்படுகின்றன. ‘மைக்ரோ’ வரலாறுகள் காலத்தின் ஓட்டத்தில் மறுவாசிப்புகளிலும் மறுஆய்வுகளிலும் மாற்றம்பெறுவதில்லை. அவை தனிமனிதனின் பார்வையில் இருந்து எழுதப்படும் எளிய சாட்சிகளாக படிமங்களாகின்றன.

1940களின் நிகழ்வுகள் 1970களில் நாவலாகப் பதிவு செய்யப்பட்டு 2010களில் வாசிக்கும் இன்றைய தலைமுறை வாசகனையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு இந்நாவல் பயணப்படுகிறது.


## அம்மாவின் ரகசியம்

(குறுநாவல்)

**சுநேத்ரா ராஜகருணாநாயக**

தமிழில்: **எம். ரிஷான் ஷெரீப்**

**ரூ. 55 (வி.பி.பி.யில் ரூ. 65)**




பெண் வாழ்க்கையின் இடுக்குகளில் பொதிந்து கிடக்கின்றன பல ரகசியங்கள். அவை பல சமயம் அங்கேயே கிடந்து மக்கிப்போகின்றன கல்லாக கனத்த படி. அபூர்வமாகச் சில சமயம் அந்த ரகசியங்கள் பூப்போல மேலே மிதந்துவந்து இளைப்பாறலைத் தரும் வாய்ப்புகளை வாழ்க்கை ஏற்படுத்துகிறது. சில சமயம் ரகசியங்கள் மூர்க்கத்தனமாக உடைபடும் அபாயங்கள் நேர்கின்றன. சில சமயம் அவற்றைப் பேசியே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தை சிலர் எதிர்கொள்ளும்போது நூலிழை பிரிவதுபோல் மெல்ல மெல்ல அவை பிரியலாம். அல்லது சலனமற்ற குளத்தில் எறிந்த கல்லைப்போல் அலைகளை ஏற்படுத்தலாம். அபூர்வமாக அவை அடுத்தவரின் மனத்தை இளக்கி உறவின் ஒரு மூடப்பட்ட சன்னலைத் திறக்கலாம். ‘அம்மாவின் ரகசியம்’ குறு நாவலில் வரும் முத்துலதாவுக்கும் ஒரு ரகசியம் இருக்கிறது. அது எப்படி உருவாகியது, அந்த ரகசியத்தை அவள் எப்படித் தாங்கினாள், ஏன், எப்படி அதை வெளியிடத் தீர்மானித்தாள் போன்றவற்றின் ஊடே கதை தன் பாதையை அமைத்துக்கொள்கிறது.

**அம்பை**

## நிழலின் தனிமை

**தேவிபாரதி**


**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**




ஓர் அபத்தமான நாள் முப்பது வருட நீட்சியுடன் முடிவடையாமல் தொடர்வது எப்படி? அது முடிவடையும் கணத்தில் மானுடக் கருணையின் மாபெரும் வெறுமை கவிவது ஏன்? இந்த இரண்டு கேள்விகளுக்கு இடையிலான பதிலைத் தேடுகிறது ‘நிழலின் தனிமை’.

காமம், அதையொட்டிய அதிகாரம், அதற்கெதிரான வஞ்சினம், பழி தீர்க்கும் வெறி என்று மன இருளின் வெவ்வேறு நிற பேதங்களைச் சொற்கள் மூலம் உருவாக்குகிறது இந்த நாவல். தாம் மட்டுமே அறிந்த இருளுக்குள் தீர்மானத் துடனும் நோக்கமின்றியும் இயல்பாக நடமாடும் வெவ்வேறு பாத்திரங்கள் அந்த நிழல் நிறச் சொற்களை இயக்குகிறார்கள். வார்த்தைகளுக்குள் வசப்பட மறுக்கும் கொந்தளிப்பை காட்சிகளாகவும் அந்தக் காட்சிகளை உண்மையின் விசாரணைகளாகவும் முன்வைப்பதில் தேவிபாரதி அடைந்திருக்கும் வெற்றிக்குச் சாட்சியுமாகிறது நாவல். உள் அடுக்குகளில் நுட்பமாக நிகழும் உளவியல் அலசலும் சமூக விமர்சனமும் புனைவைக் கதை கடந்த எல்லைக்குக் கொண்டுசெல்கின்றன.

மனித மனத்தின் ததும்பல்களையும் சீற்றத்தையும் பகையையும் வேட்கையையும் தந்திரத்தையும் அவமானத்தையும் தோல்வியையும் இவ்வளவு தீவிரத்துடன் வெளிப்படுத்தும் படைப்பு இது.




## கசகறணம்

**விமல் குழந்தைவேல்**

**ரூ. 175 (வி.பி.பி.யில் ரூ. 175)**

மண்ணை இழந்த மனிதர்களையும் மனிதர்கள் இழந்த மண்ணையும் பற்றிய கதை; போராட்டத்தின் பெயரால் தமது வாழ்வைத் தொலைத்த எளிய மக்களின் பெரும் துயரத்தின் ஆவணம் இந்த நாவல். வாழ்வனுபவங்களிலிருந்து அவர்கள் பெறும் பாடங்கள் அவர்களை அசாதாரணமான பாத்திரங் களாக மாற்றுகின்றன.

பார்த்து அறியக்கூடிய கிராமக் காட்சியின் அறியப்பெறாத உள்ளோட்டங்களை 'வெள்ளாவி'க்குப் பிந்தைய இந்நாவலில் வெற்றிகரமாக முன்வைக்கிறார் விமல் குழந்தைவேல்.


## ஓதி எறியப்படாத முட்டைகள்




**மீரான் மைதீன்**

**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**

இஸ்லாமிய சமூகத்தின் இருவேறு உலகங்களின் இயல்புகளைச் சொல்லுகிறது மீரான் மைதீனின் நாவல். பொருளாசையும் தரித்திரமும் கொண்ட இருவேறு மனித இயற்கைகளின் மோதலில் முன் நகர்கிறது இதன் கதையோட்டம். காணும் செல்வத்தையெல்லாம் தன்னுடைய தாக்கிக்கொள்ளும் ஹமீதுசாகிபு. வறியவனான குச்சித் தம்பி இருவருக்கும் இடையில் நடக்கும் சதுரங்க விளையாட்டின் பின்புலத்தில் பல்வேறு மனிதர்கள் உருட்டப்படுவதை எதார்த்தமும் மீபுனைவுமாக விரித்துச் சொல்லுகிறார் மீரான் மைதீன்.




## ஆத்துக்குப் போகணும்

**காவேரி**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

காவேரியின் இந்நாவல் பெண்ணின் இடம் எதுவென்ற கேள்வியை மையமாகக்கொண்டு விரிவடைகிறது. வீடு என்ற அமைப்பில் பெண்ணுக்குள்ள வாய்ப்பையும் உரிமையையும் ஆராய்கிறது.

வீடு, பொதுவாக ஒரு வசிப்பிடம். ஆனால் பெண்ணுக்கு? பெண்தான் வீட்டை அமைக்கிறாள். கடைசியாக அது அவளுடைய சௌகரியங்களுக்கல்ல. ஆணுக்கும் குழந்தைகளுக்கும்தான் இடம் தருகிறது. ஏன்? வீட்டின் பௌதிக மதிப்பையும் பெண்தான் உயர்த்துகிறாள். ஆனால், அந்த மதிப்பில் மரபுரிமை கோர அவளுக்கு வழியில்லை. எதனால்? நாம் நமது உடலில் குடியிருப்பதுபோல வீட்டுக்குள் குடியிருக்கிறோம். எனினும் பெண்ணுக்கு அந்த இருப்பு எட்டாப் பொருள். எப்படி?

நாவலின் மையப் பாத்திரமான காயத்ரி எழுப்பும் இந்த மும்முனைக் கேள்விகளுக்கும் அவள் தாய் மீனாட்சி தனது வழியிலும் அணுகுமுறையிலும் விடை காண்கிறாள். வீடு ஒரு பாதுகாப்பு, ஒரு பாலைவனச் சோலை என்று புரிய வைக்கிறாள்.




## பயணக் கதை

**யுவன் சந்திரசேகர்**

**ரூ. 290 (வி.பி.பி.யில் ரூ. 290)**

சமகாலத் தமிழ் எழுத்தாளர்களில் மிகத் தேர்ந்த கதை சொல்லி யுவன் சந்திரசேகர். அதிதீவிரமான படைப்பும் சுவாரசியமாக எழுதப்பட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு அவரது புனைகதைகள். யுவன் சந்திரசேகரின் ஆறாவது நாவலான 'பயணக் கதை' அவருடைய நாவல்களிலேயே உச்சபட்ச வாசிப்பு சுகத்தை உள்ளடக்கியிருக்கிறது.

மூன்று நண்பர்கள் மேற்கொள்ளும் பயத்தின் கதையாகத் தொடங்கும் நாவல் மூவரும் சொல்லும் தனித்தனிக் கதைகளின் பயணங்களாக வாசக மனதில் விரிகிறது. மூன்று பயணக் கதைகளும் சந்திக்கும் புள்ளியில் அவை ஒரே கதையாகவும் குவிகின்றன. கிருஷ்ணன் சொல்லும் கதையும் இஸ்மாயில் சொல்லும் கதையும் சுகவனம் சொல்லும் கதையும் மூன்றாக இருந்தாலும் ஒன்றுக்கொன்று பின்னப்பட்டவை. ஒருவர் சொல்லும் கதையிலிருந்து கிளை பிரியும் இன்னொரு கதை, அதிலிருந்து விலகிச் செல்லும் மற்றொரு கதை, வேறொரு கதையிலிருந்து இன்னொரு கதைக்குள் வந்து சேரும் பிறிதொரு கதை என்று விரியும் நாவல் காலத்தைப் பகுக்கிறது. களங்களைப் புதிது புதிதாக உருவாக்குகிறது.

## புகை நடுவில்




**கிருத்திகா**

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)**

பெண்ணியம் என்ற சொல்லோ கருத்தாக்கமோ தமிழ்ச் சூழலில் பேசப்படாதிருந்த காலப்பகுதியில் பெண்மைய நோக்கில் எழுதப்பட்ட நாவல் கிருத்திகாவின் 'புகை நடுவில்'.

வழக்கமான நாவல்களில் வருகின்றாற்போல, சம்பவம் எதில் முடிந்தது என்றோ, கதாபாத்திரத்தின் முடிவு என்னவாயிற்று என்றோ இந்த நாவலை ஒட்டி யோசிக்க முடியாது. சம்பவங்களின் தொகுப்பாக இருக்கிறது என்பதைவிடத், தர்க்கரீதியான பல கருத்துக்களை விவாதிக்கவே சம்பவங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. செறிவான எழுத்து, தத்துவ விசாரம் இருக்கிறது. ஆனால் தத்துவ சிக்கல்கள் இல்லை. எல்லாப் பாத்திரங்களின் எண்ணங்களும் உணர்வுகளும் மனித மனங்களின் கூறுகளாகவே அணுகப்பட்டிருக்கின்றன. எந்தக் கதாபாத்திரமும் சரி தவறு என்ற முறையில் அணுகப்படவில்லை. இந்த நடுநிலையான அணுகுமுறையே கிருத்திகாவின் முதன்மையான ஆகிருதி.




## கடவுளின் நண்பர்கள்

**கோகுலக்கண்ணன்**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

தமிழ் இலக்கியப் பரப்பில் அதிகம் இடம்பெறாத ஒரு களத்தை எடுத்துக் கொண்டு அதிகம் பேசப்படாத விஷயங்களைப் பேச முனைவதும் பூசி மெழுகாமல் அவற்றைக் கையாள்வதும் இந்த நாவலின் சிறப்புக்கள். பொறியியல் கல்லூரி மாணவர் விடுதியின் பின்புலத்தில் மண்டல் கமிஷன் அமலாக்கம், ராமர் கோவில் பிரச்சார இயக்கம் ஆகியவற்றால் மாணவர் சமுதாயத்தில் ஏற்படும் கொந்தளிப்புகள் அழுத்தமாகப் பதிவாகின்றன. இட ஒதுக்கீடு என்னும் கோட்டின் இரு புறமும் நிற்கும் மாணவர்களின் உணர்ச்சிகளும் போக்குகளும் பக்கச் சார்பு இல்லாமல் வெளிப்படுத்தப்படுகின்றன. தர்க்க ரீதியான வாதங்களைத் துணைக்கு அழைக்காமல் உணர்ச்சிகளின் தளத்திலேயே யதார்த்தத்தை எதிர்கொள்கிறது இந்நாவல்.

மாணவர் விடுதி என்னும் பின்புலம் இவ்வளவு துல்லியமாகத் தமிழ்ப் புனைகதைப் பரப்பில் பதிவானதில்லை. மண்டல், கோவில் சார்ந்த சலனங்களுடன் ராகிங் என்னும் அம்சமும் நாவலில் கையாளப்படுகிறது. ராகிங்கின் பல்வேறு அம்சங்கள் அவற்றின் குரூரங்களுடன் பதிவாகியிருக்கின்றன.

இவை அனைத்தும் புனைவம்சத்துடனும் தேவையான மௌனங்களுடனும் வெளிப்படுவது நாவலின் கலைப் பெறுமானத்தைக் கூட்டுகிறது. கதாபத்திரங்களின் சித்திரங்கள் கதைப் போக்கிலும் உரையாடல்களிலும் துலங்குவது நாவலாசிரியரின் எழுத்தாளுமைக்குச் சான்றாக விளங்குகிறது.

## கலங்கிய நதி




**பி.ஏ. கிருஷ்ணன்**

**ரூ. 250 (வி.பி.பி.யில் ரூ. 250)**

ஈடுகட்ட முடியாத இழப்பின் பிடியில் சிக்கித் தவிக்கும் அரசு அதிகாரியான சந்திரன் அஸ்ஸாமில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இன்ஜினீயர் ஒருவரை மீட்கும் பணியில் முனைந்து ஈடுபடும்போது சந்திக்கும் பலவிதமான மனிதர்கள் தமிழ்ப் புதின உலகுக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்க்கிறார்கள்.

கடத்தல் தொடர்பான பேச்சுவார்த்தை உச்சத்தை அடையும் தருவாயில் சந்திரன் தன் நிறுவனத்தில் நடந்த பெரிய ஊழலைக் கண்டுபிடிக்கிறான். அதனால் தனக்கு ஏற்படும் சிக்கல்களையும் கடத்தல் நாடகம் எவ்வாறு முடிவுறுகிறது என்பதைப் பற்றியும் நாவல் எழுத முனைகிறான். பல அடுக்குகள் கொண்ட இந்த நாவல் கதைக்கும் அதை எழுதுபவனுக்கும் உள்ள எல்லைக்கோட்டை மாறி மாறிக் கடக்கிறது. சந்திரனின் மனைவி சுகன்யாவுக்கும் அவன் நண்பர்களுக்கும் இடையிலான கடிதப் பரிவர்த்தனையில் உண்மையின் பல சாயல்கள் இயல்பாக வெளிப்படுகின்றன.

தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் திறம்பட எழுதும் மிகச் சில இந்திய எழுத்தாளர்களில் ஒருவரான பி. ஏ. கிருஷ்ணன் தன் முதல் நாவலான *Tiger Claw Tree*ஐத் தமிழில் *புலிநகக் கொன்றை* எனப் படைத்தார். பரவலான கவனத்தையும் பாராட்டையும் பெற்ற அப்படைப்புக்குப் பின் *கலங்கிய நதி* கிருஷ்ணனின் இரண்டாம் புதினமான *Muddy River*இன் தமிழ் வடிவமாக வெளிவருகிறது.



## ஆனைவாரியும் பொன்குருசும்

குறு நாவல்

**வைக்கம் முகம்மது பஷீர்**

**தமிழில்: குளச்சல் மு. யூசுப்**

**ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)**

வைக்கம் முகம்மது பஷீர் என்ற படைப்பாளுமையின் இருவேறு முகத் தோற்றங்களைக் காட்டுகிறது இந்நூல். 'ஆனைவாரியும் பொன்குருசும்' என்ற நெடுங்கதையும் 'செவிசாய்த்துக் கேளுங்கள், அந்திமப் பேரோசை' நீண்ட உரையும் இதில் இடம்பெற்றுள்ளன. பஷீர் கதைகளில் மிகவும் விநோதமும் தீவிர நகைச்சுவையும் கொண்ட கதை இது. பஷீர் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் மிகவும் நீண்டதும் தீர்க்கமானதுமான உரை இது.

கதையில் ஊடாடும் கட்டுரைத்தன்மையும் உரையில் பளிச்சிடும் கதைக் கூறுகளும் இவற்றை ஒன்றிணைத்துப் பார்க்க உதவுகின்றன. அவை பஷீர் என்ற ஆகச் சிறந்த கதைசொல்லியின் ஆற்றலை அடையாளம் காட்டுகின்றன. இன்றும் புதுமை கலையாத கதை; இன்றைக்கும் பொருந்தக்கூடிய உரை.

## கலி புராணம்




**மு. தளையசிங்கம்**

**ரூ. 80 (வி.பி.பி.யில் ரூ. 90)**

'கலி புராணம்' உண்மையாகவே நடந்த நிகழ்ச்சியால் தூண்டப்பட்டதாகும். ஒரு வெள்ளாள குலத்துப் பெண்ணோடு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் கனகாலமாக களவாக உறவு வைத்திருந்து பின்னர் அவளைக் கொலை செய்த நிகழ்ச்சிதான் இதன் பின்னணி. ஆனால் கதை வழமையான சாதிப் போராட்டக் கதையாக, தாழ்த்தப்பட்ட மக்களை ஊரைவிட்டுத் துரத்தும் 'பேயோட்டக்' கதையாகத் தோற்றங்காட்டினும் இது இன்று ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் தாழ்த்தப்பட்ட (தலித்) மக்களுக்கெதிரான மேற்சாதிக்காரரின் அடக்குமுறையை, அக்கிரமங்களை வெளிப்படுத்தி எழுதப்பட்ட எந்தப் படைப்போடும் ஒப்பிடுவது முழுமையாகாது.

# சிறுகதைகள்




## வாசனை

(நவீனத் தமிழ் கிளாசிக் வரிசை சிறுகதை)

**சுந்தர ராமசாமி**

**ரூ.275 (வி.பி.பி.யில் ரூ.275)**

'கூறியது கூறல்', 'போலச் செய்தல்' இவையிரண்டையுமே மறுதலித்து மேலெழும் சுந்தர ராமசாமியின் படைப்பு உலகின் ஆகச் சிறந்த கதைகளின் தொகுப்பு இந்நூல். யதார்த்தக் கதைகளின் வழியே வாசகனை மனவிரிவுக்கு உட்படுத்தும் அதேவேளையில் மொழியழகோடு கூடிய அபூர்வமான சொல்லாட்சிகள் மூலம் கவித்துவத் தருணங் களைத் தேர்ந்த இசைக்கலைஞனைப்போல ஸ்ருதி பிசகாமல் மீட்டும் சு.ரா, நேற்றின் வழித்தடத்திலிருந்து விலகி புதியக் கருக்களைத் தேடிக் கண்டடைந்து முன்னோக்கிச் சென்ற பயணத்தை துலக்கமாக வெளிப்படுத்தும் தொகுப்பு இது.





## 1945இல் இப்படியெல்லாம் இருந்தது...

**அசோகமித்திரன்**

**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**

வாழ்க்கையின் அபத்தத்தையும் ஆச் சரியத்தையும் துக்கத்தையும் கனிந்த பார்வையுடனும் எள்ளல் மிளிரும் நடையிலும் கருணையுடனும் வெளிப்படுத்துகின்றன இந்தக் கதைகள். 'உண்மைக்கும் புரிதலுக்கும் உள்ள இடைவெளி' தான் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் எல்லாக் கதைகளுக்கு மான மையப் பொருள்.

கடந்த ஐந்தாண்டுகளில் அசோகமித்திரன் எழுதிய இருபத்தி இரண்டு கதைகளின் தொகுப்பு இந்நூல்.




## உயிர்க்கொல்லி


பிரெஞ்சுச் சிறுகதைகள்

தமிழில்:

**நாகரத்தினம் கிருஷ்ணா**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**

நாகரத்தினம் கிருஷ்ணா பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழாக்கம் செய்த ஐந்து கதைகளின் தொகுப்பு இந் நூல். இதற்கு முன்பு பிரெஞ்சு மொழி யின் செவ்வியல் கதைகளை மட்டுமே வாசித்துப் பழக்கப்பட்டிருக்கும் தமிழ் இலக்கிய வாசகர்களுக்கு இந்தக் கதைகள் வாசிப்பில் புதிய அறை கூவலை முன்வைக்கின்றன. மனித மனத்தின் நவீன சிடுக்குகளை இரக்கமின்றி வெளிப்படுத்துகின்றன எல்லாக் கதைகளும். இலக்கிய வாசிப்பு சுகம் மட்டுமல்ல; அமைதியைக் குலைக்கும் 'புனிதச் சடங்கு' என்பதை நிறுவும் தொகுப்பு இது.




## ராணியுடன் ஒரு தேநீர் விருந்து

வெல்ஷ் மொழிச் சிறுகதைகள்

தமிழில்: **அரவிந்தன்**

**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**

இங்கிலாந்தின் வேல்ஸ் மாகாணத் தில் பேசப்படும் வெல்ஷ் மொழியில் எழுதப்பட்ட சிறுகதைகள் இவை. மொழிவழிச் சிறுபான்மை இனமான வெல்ஷ் மொழி பேசும் மக்கள் தங்கள் மொழி, பண்பாடு ஆகியவற்றில் தனி அடையாளமும் பெருமிதமும் கொண்டவர் கள். ஆங்கிலத்தின் உலகளாவிய ஆதிக்கத்தின் கீழ் முக மற்றுப்போன தங்கள் மொழியின் முகத்தை மீட்டெடுப்பதன் மூலம் தங்கள் பண்பாட்டின் அடையாளத்தை மீட்டெடுப்பதற் கான முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள்.

வேல்ஸ் மக்களின் பண்பாடு, மொழிச் சிக்கல்கள், நிலப்பரப்பு, தட்பவெப்ப நிலை என அவர்களது வாழ்நிலையைச் செறி வாகவும் படைப்பூக்கத்துடனும் முன்வைக்கும் கதைகள் இவை.




## காட்டில் நடந்த கதை

வங்க மொழிச் சிறுகதைகள்

**விபூதிபூஷண் பந்தோபாத்யாய**

**தமிழில்: புவனா நடராஜன்**

**ரூ. 95 (வி.பி.பி.யில் ரூ. 105)**

'பதேர் பாஞ்சாலி' நாவல் மூலம் உலகப் புகழ்பெற்ற விபூதிபூஷண் பந்தோபாத்யாயவின் பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு இது.

மண்ணின் மனதை வாசித்தறிந்த கலைஞர் விபூதிபூஷண். அவரது படைப்புலகில் இயற்கை தனது மானுடச் சாயலை வெளிப் படுத்துகிறது. தாவரங்களும் விலங்குகளும் பறவைகளும் புழுக்களும் பூச்சிகளும் மனித இயல்பு கொள்கின்றன. அதே சமயம் மனிதர்கள் இயற்கையின் கொடையாக உருவம் பெறுகின்றனர். அவர்களது மனமும் செயலும் மிகையின்றி அப்பட்டமாக முன்வைக்கப்படுகின்றன. அவர்களது நன்மை யும் வன்மமும் பகையும் பயமும் குதூகலமும் பச்சை வாடை மறையாமல் சித்தரிக்கப்படுகின்றன.

மனிதனை இயற்கையுடன் இயைபுபடுத்தும் சூழலியல் முயற்சி கள் இன்று வியந்து பேசப்படுகின்றன. ஆனால் முக்கால் நூற்றாண்டுக்கு முன்பே இந்த நோக்கைத் தனது கலையில் பிரதிபலித்தவர் விபூதிபூஷண் பந்தோபாத்யாய.

இந்தத் தொகுப்பு அந்தக் கலை நோக்கின் சான்றுகளில் ஒன்று.

## விட்டில் – சமகால அரசியல் பகுப்பாய்வு


**இராகவன்**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**




ஈழத்து எழுத்தாளர் இராகவனின் இந்தச் சிறுகதைகள் வாசகரை முதலில் அதிர்ச்சிக்குள்ளாக்கும். மரபான கதையாடலை முற்றிலும் புறக்கணிக்கும் இந்தக் கதைகள் உள்ளடக்கத்திலும் மரபை மீறுபவை. புனைவு – எதார்த்தம் என்ற வகைப் படுத்தல்களைக் கடந்து உருவாகியிருக்கும் பிரதிகள் இவை. இவற்றில் வினாத்தாள்களும் விளம்பரங்களும் நாடகமும் சுவரொட்டிகளும் கடிதங்களும் இன்னபிறவும் பயன்படுத்தும் இலக்கியமற்ற மொழி இலக்கியமாக உருமாற்றம் கொள்வதை அவதானிக்கலாம்.

## என் தாத்தாவுக்கொரு தூண்டில் கழி




சீனத்துச் சிறுகதைகள்

**தமிழில் : ஜெயந்தி சங்கர்**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

சீன இலக்கியத்தையும் பண்பாட்டையும் தொடர்ந்து தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வரும் ஜெயந்தி சங்கரின் புதிய பங்களிப்பு இந்த நூல்.


கம்யூனிச யுகத்திலும் அதற்குப் பின்பும் சீன இலக்கியத்தில் நேர்ந்திருக்கும் திசை மாற்றத்தை அடையாளம் காட்டுகின்றன இந்த நூலிலுள்ள சிறுகதைகள். அதிகாரபூர்வ இலக்கியமாக அறிமுகப்படுத்தப் பட்டவற்றைக் கடந்து கலையாக இலக்கியம் வடிவம் பெற்றிருப்பதை இந்தக் கதைகளிலிருந்து அறியலாம்.

2000ஆம் ஆண்டு இலக்கியத்துக்காக முதன்முறையாக நோபெல் பரிசுபெற்ற காவோ ஸிங் ஜியாங் உள்ளிட்ட பதின்மூன்று எழுத்தாளர்களின் கதைகளடங்கிய இந்த நூலை பழைய திசையில் புதிய உதயம் என்று தயங்காமல் சிறப்பிக்கலாம்.

## வெள்ளி விரல்

**ஆர்.எம். நௌசாத்**


ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)




இந்தக் கதைகளின் களம் – ஈழம், தாய்லாந்து, விண்வெளி. காலம் – நேற்று, இன்று, நாளையையும் கடந்த முடிவற்ற காலம். இடமும் பொழுதும் வெவ்வேறானாலும் மனிதர்கள் தமது இருப்புக்காவும் அடையாளத்துக்காகவும் போராடுகிறார்கள். அடையாளங்கள் சில சமயம் வாழ்வை ஆபத்துக்குள்ளாக்குகின்றன. வாழ்வடையாளத்துக்காகப் பல சமயம் அபாயகரமாகப் போராட நேர்கிறது. இந்த மானுடச் சிக்கலை முன்வைப்பவை இந்தக் கதைகள்.

சு.ரா. நினைவு குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற ‘நட்டுமை’ யின் ஆசிரியர் நௌஸாத்தின் 12 கதைகள் கொண்ட தொகுப்பு இந்நூல்.

## பலார்ஷாவிலிருந்து நாக்பூருக்கு




தெலுங்குச் சிறுகதைகள்

**ஸ்ரீவிரிஞ்சி**

**தமிழில்:**

**கௌரி கிருபானந்தன்**

**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**

தமிழுக்கு மிக அணுக்கமான மொழியாக இருந்தும் தெலுங்கில் நடைபெறும் இலக்கியச் செயல்பாடுகள் நமக்குத் தெரியவருவதில்லை என்ற குறையைப் போக்கும் முயற்சியில் சின்ன அடிவைப்பு இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

ஸ்ரீ விரிஞ்சியின் பத்து கதைகள் கொண்ட இந்தத் தொகுப்பு ருசிகரமான வாசிப்புக்குரியது. இந்தக் கதைகளின் பின்னணி அன்றாட வாழ்வின் இயக்கத்தைச் சார்ந்தது. மனித இனத்தை மேன்மைப்படுத்துவது என்ற பொது இழை எல்லாக் கதைகளிலும் ஊடுருவிச் செல்கிறது. வாழ்வதல்ல; மேம்பட வாழ்வது என்பதே இந்தக் கதைகள் முன்வைக்கும் பொதுச் செய்தி.

## லயோலா என்ற பெரும்பாம்பின் கதை




பதின்மூன்று அயல்மொழிச் சிறுகதைகள்

**தமிழில்: சுகுமாரன்**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**

வெவ்வேறு களத்தையும் காலத்தையும் பின்புலமாகக் கொண்ட பதின்மூன்று கதைகளின் தொகுப்பு இந்த நூல்.

இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதிக்கு முந்தைய ஆண்டுகள் முதல் இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பப் பதிற்றாண்டுகள் வரையான காலப் பகுதியில் எழுதப்பட்டவை இந்தக் கதைகள். அந்தந்தக் காலத்தின் அடையாளங்களையும் அந்தந்த இடத்தின் சின்னங்களையும் அந்தந்த மக்கள் இனத்தின் வாழ்வனுபவங்களையும் இவை எதிரொளிக்கின்றன. இலக்கியக் கலையின் உச்சம் என்று போற்றப்படும் எழுத்தாளர்களும் அறிமுகச் சாதனையாளர்களும் கதைகளின் பின்னணியில் அணிவகுக்கிறார்கள்.

மூலத்தின் செறிவு குலையாமல் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இந்தக் கதைகள் தமிழ் வாசகனிடம் ஒரு செய்தியைச் சொல்லுகின்றன. அது: கதை என்பது வெறும் புனைவு மட்டுமல்ல.




## நிலவுக்குத் தெரியும்

**சந்திரா இரவீந்திரன்**

**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**

துயரத்தின் வடிவம் ஒப்பாரியாகத் தான் இருக்க வேண்டுமென்று மில்லை. மனதில் உறைந்துபோன கண்ணீரின் பாறைகளாகவும் இருக்கக்கூடும். சந்திராவின் கதை கள் சுமந்திருக்கும் துயரம் இரண்டா வது வகை சார்ந்தது. ஒரு பெருங் கடலின் சீற்றமான பேரலை களாக இவை இல்லாமல் கரையோரம் மெல்ல வந்து தன் ரகசியத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி மீள்கின்ற சிற்றலைகள்போல் வெளிப்படுகின்றன. தன் துயரம்பற்றி மட்டும் பேசாமல் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பங்கண்டும் அது பேசமுயல்கின்றது.

சந்திராவின் கதைகளில் அடக்கமான தொனியும் உண்மை யின் ஒளியும் கலைத் தரமும் புலனாகும். முக்கியமாகக் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டியது அவருடைய எழுத்துகளில் தென் படும் நேர்மை.

## உமா வரதராஜன் கதைகள்




**உமா வரதராஜன்**


**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

தன் அனுபவங்களை, உணர்வுகளைக் கலையாக்கும் ஒருவராக உமா வரதராஜன் அவருடைய படைப்புகள் மூலம் அடையாளம் காணப்பட்டவர். உமா வரதராஜனின் படைப்புகள் வெளிப்படுத்தும் சமூக யதார்த்தமும் அவை ஏற்படுத்தும் கலைப் பாதிப்பும் ஆழமானவை. சமூகம் தன்னகத்தே கொண்டுள்ள பொய்மையை, போலித்தனங்களை, முரண்களை அவை அம்பலப்படுத்துகின்றன. அவற்றுக் கிடையே அகப்பட்டு நசுங்கும் மனித உள்ளத்தின் அவஸ்தை யை வாசகன் மனதிலும் தொற்றச் செய்கின்றன. இதுவே இவரது கலையின் வெற்றி.

சுமார் முப்பது ஆண்டு கால இடைவெளியில் எழுதப்பட்ட கதைகளின் முழுத் தொகுப்பு இது.

# வாழ்க்கை வரலாறு

## நீதி மறுக்கப்பட்ட கதை




டாக்டர் பினாயக் சென்னின் போராட்டம்

**மின்னி வைத்**

தமிழில்: **க. திருநாவுக்கரசு**

**ரூ. 225 (வி.பி.பி.யில் ரூ. 225)**

உலகப் புகழ்பெற்ற மருத்துவக் கல்வி நிறுவனங்களுள் ஒன்றான வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்து வக் கல்லூரியில் பட்டம்பெற்ற டாக்டர் பினாயக் சென் தனது வாழ்க்கையை, தனது மருத்துவ அறிவை சத்தீஸ்கர் பழங்குடி மக்களுக்காக அர்ப்பணித்தவர். தனது வாழ்க்கையை தியாகம் செய்ததாக அவர் ஒருபோதும் கருதியதில்லை. மனிதர்களின் உடல் நலமும், அவர்களது சமூகப் பொருளாதார நிலையும் கொண்டுள்ள மிக நெருங்கிய உறவை அவர் தனது முதுகலைப் படிப்பின்போதே அறிந்துகொண்டார். மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமைகள் நிலைநாட்டப்படாமல் ஒரு சமூகத்தில் மருத்துவச் சேவை நிலைபெறுவது சாத்தியமல்ல என்பதை சத்தீஸ்கர் பழங்குடி மக்கள் மத்தியில் பணியாற்றியபோது அறிந்து கொண்டார். தனது சொந்த மக்கள் மீதே ஓர் அரசாங்கம் போர் தொடுப்பதை கேள்விக்குள்ளாக்கியபோது அவ ருக்கு இன்னல்கள் தொடங்கின, இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன . . .

“பணக்காரனாக இருப்பதல்ல, புகழ்பெற்றவனாக இருப்பதல்ல, அதிகாரம் கொண்டவனாக இருப்பதல்ல, ஏன் மகிழ்ச்சியானவனாக இருப்பது கூட அல்ல, பண் பட்ட மனிதனாக இருப்பதே அவனது வாழ்க்கையின் லட்சியம்” என்ற அமெரிக்க எழுத்தாளர் பிலிப் ராத்தின் வார்த்தைகளுக்கு வாழும் உதரணமாக இருக்கும் மனிதர் பினாயக். அவருக்கு சத்தீஸ்கர் மாநில அரசாங்கம் இழைத்த கொடுமையையும், அநீதியையும் அதற்கெதிராக உலகெங்கும் எழுந்த மக்கள் போராட்டங் களையும் விவரிக்கிறது இந்நூல்.

# நினைவோடை




## நினைவோடை: கு. அழகிரிசாமி

**சுந்தர ராமசாமி; ரூ. 50 (வி.பி.பி.யில் ரூ. 60)**

சந்தித்து நட்பும் உறவும் கொண்டிருந்த ஆளுமைகள் பற்றிய சுந்தர ராமசாமியின் நினைவோடை வரிசையில் எட்டாவது நூல் இது.

மென்மையும் நேரடியுமான சிறுகதைகள் மூலம் தமிழில் முக்கிய இடத்தைப் பெற்றவரான கு. அழகிரிசாமியின் இயல்புகளையும் எழுத்துச் செயல்பாட்டின் பின்னணிகளையும் இந்நூல் முன்வைக்கிறது. அழகிரிசாமியைச் சந்திப்பதற்கு முன்பே அவருடைய கதைகளைத் தேடி வாசித்த வாசகரான சுந்தர ராமசாமி நேர்ப்பழக்கத்தில் அவருடன் கொண்டிருந்த நட்பு நெருக்கமானது; இலக்கியம் சார்ந்து சமரசமற்றது.

# கவிதைகள்




## காடாற்று

**சேரன்**

**ரூ. 90**
**(வி.பி.பி.யில் ரூ. 100)**

ஊழிக்கும் இனப்படு கொலைக்கும் பின் கவிதை எழ முடியுமா? எழுத முடியுமா?

முள்ளிவாய்க்காலுக்கும் நந்திக் கடலுக்கும் பின்னான சேரன் கவிதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன.

நீரற்றது கடல்
நிலமற்றது தமிழ்
பேரற்றது உறவு

என்பது இந்தக் கவித்தொகையில் உள்ள ஒரேயொரு தலைப்பற்ற கவிதை.




## நீள் தினம்

**பூமா ஈஸ்வரமூர்த்தி**
**ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)**

அன்றாட கவனிப்பில் பிடிபடும் எளிய கணநேர நிகழ்வுகளைச் சொல்பவை பூமா ஈஸ்வரமூர்த்தியின் கவிதைகள். நிகழ்வுகளைச் சொல்லும்போதும் சொல்லைக் கடந்த மனநிலையை வாசகனிடம் உருவாக்க முயற்சி செய்கிறார். ‘இன்றைக்கும், எப்போதும் பெரும் காதலுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் நாளைக்கும் இடையில் வந்து விழும்’ கவிதை நிகழ்வுகளை இந்தத் தொகுப்பில் உணரலாம்.

## யாரும் வராதபோது


**இலா**
**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**




தேடுதலையும் அதன் வலிமையையும் தேடி அடைதலையும் அதன் விடுதலையையும் இலாவின் கவிதைகள் முன்வைக்கின்றன. சமூக மனத்தின் கட்டமைப்பில் சிறைப்பட்டிருக்கும் சுயத்தை விடுவித்து, நமக்குள் ஆழத்தில் இன்னும் உயிருடன் உலவிக்கொண்டிருக்கும் சின்னஞ்சிறு குழந்தையுடனான உறவை மீண்டும் புதுப்பித்துக்கொண்டு, காலம் தீண்டாத புதுமை கண்களில் மறுபடி இழையும் அதிசயத்தைப் பாடுகின்றன இலாவின் கவிதைகள். தமிழ்க் கவிதையின் புதியதொரு சாயலை நமக்கு அளித்திருக்கிறார் இலா.

## பெருநிலம்

**தீபச்செல்வன்**
**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**





போரால் நிர்மூலமாக்கப்பட்ட பெருநிலத்தின் மீட்கப்பட முடியாத கனவுகளையும் மீட்சியின் வழிகளையும் இந்தத் தொகுப்பில் பேசுகிறார் தீபச்செல்வன். அழிந்துபட்ட இயற்கை, குலைக்கப்பட்ட சுற்றுச் சூழல், சிதறிப்போன உறவுகள், தோல்வியடைய மறுக்கும் வாழ்வியல் வேட்கை – இவை இந்தக் கவிதைகளின் மையப் பொருட்கள். அவலப் பெருவெளியின் இருளில் துலங்கும் நம்பிக்கை ஒளி கவிதைகளை மட்டுமல்ல; ஓர் இனத்தின் நாளையையும் அர்த்தப்படுத்துகிறது.




## பட்சியன் சரிதம்

**இளங்கோ கிருஷ்ணன்**
**ரூ. 55 (வி.பி.பி.யில் ரூ. 65)**

சமகாலத் தமிழ் வாழ்வின் சலனங்களைத் தொன்மமாக்குதல்; தொன்மத்தின் கூறுகளை நிகழ்கால வாழ்வில் பொருள்காண முயற்சித்தல் – இளங்கோ கிருஷ்ணனின் கவிதைகள் நவீன இலக்கியப் பரப்பில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் படைப்புச் செயல் இது. யயாதியும் வான்கோவும் தேவகுமாரனும் நவீன மொழிக்குள் ஊடாடுகிறார்கள். கூடவே ஒரு செம்மொழி நாளைய கூற்றாக மாறும் விந்தையும் இந்தக் கவிதைகளில் நிகழ்கிறது.




## ‘ஈ’ தனது பெயரை மறந்துபோனது

**றஷ்மி**

**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**

நெடுங்கவிதைகளும் காவியமும் வழக்கிழந்து போய்விட்டன என்ற கூற்றைப் புறம் தள்ளி வைக்க நம்மிடம் இப்போது உள்ளன றஷ்மியின் கவிதைகள். அவருடைய இந்தத் தொகுப்பில் உள்ளவை காவியங்கள்; காவிய இலக்கியத்திற்குப் புது மெருகு சேர்ப்பவை. மொழியின் நுண் அழகும் மானுட வேட்கையும் சிந்தனையும் கூடும் படைப்புகள் இவை. வரலாற்றுக்குச் சாட்சியாகக் கவிஞன் நிற்க மறுத்தாலும் தவிர்க்க முடியாமல் கவித்துவ சாட்சியாக மாறும் முரண்நகையும் இந்தத் தொகுப்பில் இழையோடுகிறது.

**சேரன்**




## கண்ணுக்குத் தெரியாததன் காதலன்

**குவளைக்கண்ணன்**

**ரூ. 55 (வி.பி.பி.யில் ரூ. 65)**

கவிஞனின் எதார்த்த உலகம் ஒருபுறம். அவனுடைய மன உலகின் சஞ்சாரம் மறுபுறம். இவ்விரண்டிலும் இடையறாது மாறி மாறிக் கால் பாவும் கவிஞனின் மொழியானது இவ்விரண்டுக் கிடையேயான வெளிதனில் ஒரு ஆச்சரிய நடனம்.

## இரவைப் பருகும் பறவை

**லாவண்யா சுந்தரராஜன்**

**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**




லாவண்யா சுந்தரராஜன் கவிதைகளின் ஆதாரமான மனநிலை அன்புக்கான வேட்கை. அன்பைப் போற்றவும் அன்பின் நெருடல்களைப் பேசவும் அன்புக்கும் அன்பின்மைக்கும் இடையிலான முரண்களை ஆராயவும் இந்தக் கவிதைகள் முயற்சி செய்கின்றன.




## ஆகவே நானும்...

**தேவேந்திர பூபதி**

**ரூ. 55 (வி.பி.பி.யில் ரூ. 65)**

மிகவும் பரந்துபட்ட விஷயங்களை பாடுபொருளாகக் கொண்டிருக்கிறது பூபதியின் கவிதை. சொல்லும் சொல் குறிக்கும் பிம்பங்களும், அவை விரிக்கும் பொருளும் நுட்பத்துடன் பின்னப்பட்டு இருப்பது இவரது வலிமை. சிக்கல் விடுத்த எளிமை கைவர தேர்ச்சியும் நேர்த்தியும் கைகூட வேண்டும். பூபதியின் ‘ஆகவே நானும் ...’ கவிதைத் தொகுதியில் இது பெருமளவுக்குக் கைகூடி வந்திருக்கிறது.

**ஆனந்த்**

## புதிய அறையின் சித்திரம்

**மண்குதிரை**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




‘காலத்தின் இடைவெளியைச் சம்பாஷணைகளால் நிரப்பும் முயற்சியே’ மண்குதிரையின் கவிதையாக்கம். எளிய செயல்களையும் அன்றாடத் தகவல்களையும் பிம்பங்களின் ஓசைகளாகப் பதிவுசெய்திருக்கும் இந்தக் கவிதைகள் நவீனப் படைப்பாற்றலின் புதிய சித்திரங்களைத் தீட்டுகின்றன.




## சிவாஜி கணேசனின் முத்தங்கள்

**இசை**

**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**


நவீனத் தமிழ்ச் சூழலில் இசையைப்போலக் கவிதையுடன் இவ்வளவு அபாயகரமாக விளையாடுபவர்கள் அதிகமில்லை. கூர்வாளை வீசி விளையாடும் கோமாளியைப்போல கவிதையாட்டம் போடுகிறார். அந்த ஆட்டத்தில் புனிதங்கள் கலைகின்றன. விழுமியங்கள் சிதறுகின்றன. வாழ்வின் தருணங்கள் ஏளனப் புன்னகையுடன் நையாண்டிச் சிரிப்புடன் வெளிப்படுகின்றன. ஆபத்தான இந்த ஆட்டத்தை தார்மீகக் கோபத்துடனும் அறச் செருக்குடனும் வெளிப்படுத்துகின்றன இசையின் கவிதைகள்.

இது இவரது மூன்றாவது தொகுப்பு.

## நிலம் பிரிந்தவனின் கவிதை

**சுஜந்தன்**

**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**




இழப்பிலிருந்து எழும் கவிதை நமக்குள் எழுப்புகிற வலி பழகிப் போனதாக இருந்தாலும் சுஜந்தன் கவிதைகள் எற்படுத்துகின்ற காயங்கள் ஆறாதவையாக இருக்கின்றன.

சுடலையில் மட்டுமே விளக்கெரிகிற நகரத்தைப் பாடும் கவிஞனது கிளைகள் வேலி தாண்டியிருந்தாலும் வேர்கள் பற்றியிருப்பது மண்ணைத்தான். மண் இழந்தாலும்.

**சேரன்**




## எனது மதுக்குடுவை

**மாலதி மைத்ரி**

**ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)**

மாலதி மைத்ரியின் நான்காவது கவிதைத் தொகுப்பு இது.

முதல் மூன்று தொகுதிகளில் இடம்பெற்ற கவிதைகளிலிருந்து பொருளிலும் தொனியிலும் மாறுபட்டவை இதிலுள்ள கவிதைகள். அதே சமயம் முன் கவிதைகளுடன் இழையறாதவை.

உரிமை மறுப்புக்கு எதிராக, மானுட இருப்புக்கு ஆதரவாக, வீழ மறுப்பவர்களின் எழுச்சி அரசியலாக உருவங்கொள்ளும் இந்தக் கவிதைகள் சமகாலத்தின் மனச் சான்றாக, அடையாளம்காட்டத் தகுந்தவை.

# கட்டுரைகள்

## கனவின் யதார்த்தப் புத்தகம்

இலக்கியம் மற்றும் பிற

**அரவிந்தன்**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**




படைப்புகள், படைப்பாளிகள், மொழி, மொழிபெயர்ப்பு ஆகியவை குறித்த கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. படைப்பையும் படைப்பாளியையும் மொழியையும் காலம் மற்றும் சூழலின் பின்னணியில் வைத்துப் புரிந்துகொள்ளும் முயற்சிகள் இவை. கவனமான வாசிப்பின் அடிப்படையிலான மதிப்பீடும் தர்க்க ரீதியான அணுகுமுறையும் நேர்த்தியான மொழிநடையும் இக் கட்டுரைகளின் முக்கியமான அம்சங்கள். மொழியின் பன்முகச் செயல்பாடுகள், மொழிபெயர்ப்பின் நுண்ணிய அம்சங்கள் ஆகியவை குறித்த பார்வைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

## ஊரடங்கு இரவு

(கட்டுரை நூல்)

**பஷரத் பீர்**

**தமிழில் : க. பூர்ணச்சந்திரன்**

**ரூ. 225 (வி.பி.பி.யில் ரூ. 225)**




காஷ்மீரில் பிரிவினைவாத இயக்கம் 1989இல் வெடித்தபோது பஷரத் பீர் பதின்வயதுகளில் இருந்தவர். பின் வந்த ஆண்டுகளில் பாதுகாப்பு வேண்டி, பீர் அலீகட்டிற்குப் படிக்க அனுப்பப்பட்டார். பின்னர் தில்லியில் பத்திரிகைப் பணி ஏற்றார். ஆனால், கோபமுற்ற, மேன்மேலும் மூர்க்கமாகிய, துணையற்றுப்போன காஷ்மீர் அவரிடமிருந்து ஒருபோதும் வெகு தொலைவில் இல்லை. அவரைப் பீடித்திருந்த கதைகளை மேலும் தேடுவதற்குத் தாயகத்திற்குச் சென்ற அவர், காஷ்மீரின், அதன் மக்களின், வேதனைமிக்க, ஆழமாக உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஒரு சித்திரத்தை 'ஊரடங்கு இரவு' நூலில் தீட்டுகின்றார். போரினால் அலைக்கழிக்கப்பட்ட காஷ்மீர்ப் பள்ளத்தாக்கின் மறக்கமுடியாத ஓவியமாக அமைகிறது – கவிதை நயமிக்க, உணர்வைத் தூண்டுகின்ற, நடுங்கச் செய்கின்ற இந்த எழுத்து. இன்றைய காஷ்மீரின் துல்லியமான, 'உள்ளிருப்பவன்' பார்வை.

*தி டெலிகிராஃப்*




## மார்க்ஸின் கொடுங்கனவு

தனியுடமையென்பது தொடர்கதையா?

**டெனிஸ் கொலன்**

தமிழில்:

**நாகரத்தினம் கிருஷ்ணா**

**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**

மார்க்ஸியச் சிந்தாந்தத்தைப் பழுதறக் கற்றுத் தேர்ந்தவரும் தத்துவப் பேராசிரியருமான டெனிஸ் கொலன் ஆங்கிலத்திலளித்த நூலின் தமிழாக்கம் இந்நூல். கார்ல் மார்க்ஸ் கட்டமைத்திருக்கும் மார்க்ஸியச் சித்தாந்தத்தைப் பழமைவாதிகளிடமிருந்து விடுவித்து நவீனக் காலத்திற்கு ஏற்ற விதத்தில் அதில் மாற்றங்களைக் கொண்டுவருவதில் பெரும்பிடிப்புள்ள இவரது கட்டுரைகள் மார்க்ஸியம் பற்றிய மற்றொரு பரிமாணத்தைத் துலக்கமாக்குகிறது.

மானுட வாழ்க்கையில் உற்பத்தி, நுகர்வு என்னும் இரண்டைத் தவிர்த்துப் பிறவற்றைப் புறந்தள்ளிவிடும் முழுமுயற்சியில் முதலாளித்துவம் இறங்கியுள்ள இன்றையச் சமுதாயச் சூழல் குறித்தும் மார்க்ஸியச் சிந்தனைகள் மறுவாய்வு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாகவும் அறிவுச் செழுமையுட னும் பொதியப்பட்டுள்ள இக்கட்டுரைகள் பயனுள்ள வகையிலான செறிவுமிக்க விவாதங்களை உருவாக்கக் கூடியவை. மார்க்ஸியச் சித்தாந்தக் கோட்பாடுகளை விமர்சனப்பூர்வமாக அணுகும் அதே சமயத்தில் ஆக்கப்பூர்வமான ஒன்றாகவும் அவற்றை உள்வாங்கி மிளிர்கிறது இந்நூல்.




## பதிப்புகள் மறுபதிப்புகள்

**பெருமாள்முருகன்**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

நவீன எழுத்தாளராகவும் கல்விப் புலம் சார்ந்த ஆய்வாளராகவும் இயங்கிக்கொண்டிருக்கும் பெருமாள்முருகன், தமிழ்ப் பதிப்புச் சூழல் பற்றியும் பதிப்பாசிரியர்கள் குறித்தும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். ஆர்வமூட்டும் மொழியும் எளிய நடையும் கொண்ட இவை சங்க இலக்கியம் தொடங்கி நவீன இலக்கியம் வரைக்குமான பதிப்புப் பிரச்சினைகளைப் பேசுகின்றன. தனிமனிதத் தாக்குதலை முற்றிலுமாகத் தவிர்த்துக் கருத்துத் தளத்தில் விவாதங்களை முன்வைப்பதும் எதிர்கொள்வதுமான நோக்கோடு எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகள் பல்வேறு எதிர்வினைகளைப் பெற்றதோடு பதிப்புணர்வை உருவாக்குவதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவை.

## திரும்பிச் சென்ற தருணம்




**பி.ஏ. கிருஷ்ணன்**

**ரூ.180 (வி.பி.பி.யில் ரூ.180)**

'ஆழமாகவும் அகலமாகவும் பேசக் கூடியவர் கிருஷ்ணன்' என்று சுந்தர ராமசாமி ஒருமுறை குறிப்பிட்டார். அவர் ஆழமாகவும் அகலமாகவும் எழுதக் கூடியவர் என்பதற்கு இந்தத் தொகுப்பு ஒரு சான்று. மொழியின் எளிமை எப்போதுமே சிக்கலான பொருட்களை விளக்கத் தடையாக இருந்துவிடாது என்பதை அவரது கட்டுரைகள் காட்டுகின்றன. பயணம், வாழ்க்கை வரலாறு, மனிதர்கள், திரைப்படங்கள் போன்ற பல தளங்களில் இயங்கும் இந்தக் கட்டுரைகள் வாசகர்களை மதித்து தமிழில் எழுதும் மிகச் சில எழுத்தாளர்களில் ஒருவரான கிருஷ்ணனின் இருத்தல் அனுபவங்களின் ஒரு வடிகால்.

## லண்டன் உங்களை வரவேற்பதில்லை





**இளைய அப்துல்லாஹ்**

**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**

இளைய அப்துல்லாஹின் புலம் பெயர் வாழ்வின் அனுபவங்களே கட்டுரைகளின் பேசுபொருள். ஓர் அகதியாக லண்டனில் குடியேறி இன்று ஊடகப் பணியாளராகச் செயல்பட்டு வரும் கட்டுரையாசிரியர் லண்டன் என்ற கனவு தேசத்தின் இருவேறு இயல்புகளை முன் வைக்கிறார்.

மேற்கு உலகைச் சேர்ந்தவர்களின் லண்டன் காட்சி ஒளி நிரம்பியது. உற்சாகமளிப்பது. கிழக்குத் திசையை சேர்ந்தவர்களின் லண்டன் நாட்டம் இருள் படிந்தது. துயரம் தருவது. இழப்புக்கும் இருப்புக்குமான மையப் பிரதேசத்திலிருந்து இந்த இருவேறுலக மனிதர்களை எந்த மேற்பூச்சும் இல்லாமல் காட்டுகிறார்.

இந்த நூலின் கட்டுரைகளில் புன்னகை செய்யும் கண்ணீர்த் துளிகளையோ அழுகையில் உறைந்த சிரிப்பையோ வாசகன் காணலாம்.





## நொறுங்கிய குடியரசு

**அருந்ததி ராய்**

தமிழில்: **க. பூர்ணச்சந்திரன்**

**ரூ. 145 (வி.பி.பி.யில் ரூ. 145)**

இந்தியாவின் எல்லைகளிலிருந்து போர் அதன் இதயத்திலுள்ள காடுகளுக்குப் பரவிவிட்டது. இந்தியாவின் சிறப்புமிக்க எழுத்தாளர் ஒருவரால் அபாரமான பகுப்பாய்வையும் படைப்பூக்கம்கொண்ட செய்திப் பதிவையும் இணைத்து எழுதப்பட்டது 'நொறுங்கிய குடியரசு'. உலக வல்லரசாக எழுச்சி பெற்று வருகின்ற இந்தியாவின் முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் இயல்பை ஆராய்வதோடு, நவீன நாகரிகம் பற்றியே அடிப்படையான கேள்விகளையும் இந்நூல் எழுப்புகிறது.




## கூண்டு: இலங்கைப் போரும் விடுதலைப் புலிகளின் இறுதி நாட்களும்

**கார்டன் வைஸ்**

தமிழில்: **கானகன்**

**ரூ. 250 (வி.பி.பி.யில் ரூ. 250)**


இந்த நூற்றாண்டின் முதலாவது இனப்படுகொலை என மானுட வரலாற்றில் அழுத்தமாகப் பதிந்து விடப்போகிற மே 2009 வன்னிப் பேரவலத்தின் முக்கியமான சாட்சியங்களில் ஒன்றாக இந்த நூல் அமைகிறது. ஐக்கிய நாடுகள் அவையின் அலுவலராக அக்கால கட்டத்தில் இலங்கையில் பணியாற்றியமையால் மிகப் பெரும்பாலானோருக்குக் கிடைக்கமுடியாத தகவல்களும் அனுபவங்களும் அதிகாரத்திற்கு அண்மையில் இருப்பதால் தெரிய வரும் சிறப்பு விவரங்களும் நூலாசிரியர்க்கு வாய்த்திருக்கிறது.

சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகள் அவை போன்றவற்றின் மீது ஆழமான விமர்சனங்களை முன்வைக்கிற நூலாசிரியர் இந்தப் பேரழிவில் இந்திய அரசின் பங்கையும் பொருத்தமான இடங்களில் விவரிக்கிறார்.

பக்கச் சார்பின்றி அறக்கடப்பாட்டோடு எழுதப்பட்டுள்ள இந்த நூலின் கருத்துக்கள் எல்லாவற்றோடும் ஒருவர் உடன்பட வேண்டியதில்லை. எனினும், இந்த நூல் அம்பலப் படுத்துகிற ஏராளமானவற்றை நாம் எதிர்கொண்டேயாக வேண்டும்.

**சேரன்**

# நேர்காணல்




## சுந்தர ராமசாமி நேர்காணல்கள்

**சுந்தர ராமசாமி**

**ரூ.250 (வி.பி.பி.யில் ரூ.250)**

சுந்தர ராமசாமி படைப்புகளின் சிந்தனை முகம் அவருடைய நேர்காணல்கள். ஒரு படைப்பாளியாகவே தமது எண்ண ஓட்டங்களை நேர்காணல்களில் சு.ரா. முன்வைக்கிறார். சுயப் பறைகொட்டிக் கொள்ளாமல் கேள்வியாளரையும் வாசகரையும் இணையாகக் கருத்துத் தளத்தில் சந்திப்பதே சு.ரா. நேர்காணல்களின் சிறப்பு. தமிழ் வாழ்வின் ஐம்பதாண்டுக்கும் மேற்பட்ட காலப் பகுதியில் நிகழ்ந்த கலை, இலக்கிய, பண்பாட்டுச் சலனங்களை இந்த நேர்காணல்களிலும் கேள்வி பதில்களிலும் பதிவு செய்திருக்கிறார் சு.ரா.

# பத்திகள்





## பொன்னாலே புழுதி பறந்த பூமி

**சோலைக்கிளி**

**ரூ. 145 (வி.பி.பி.யில் ரூ. 145)**

கவிஞனாக மாத்திரம் இதுவரை அறியப்பட்ட சோலைக்கிளியின் இன்னொரு பரிமாணம் இந்த நூல்.

கிழக்கிலங்கையில் அவர் வாழும் கிராமப் பகுதியொன்றின் மண் வாசனையை, மனித நடத்தைகளை, நிலம் சார்ந்த நினைவுகளை இங்கே காணலாம். இந்தப் பதிவுகளில் அவருடைய பால்யகால ஞாபகங்கள் பொங்கி வழிகின்றன. மீளச் சுரக்கும் ஒரு காலத்தின் பருவ ஊற்று, மெல்ல நதியாகி நம் மனங்களை நனைத்துச் செல்கின்றது. அப்போது தான் தோண்டி எடுத்த, மண் உதிரா மரவள்ளிக் கிழங்குகள் போன்றவை அவருடைய அனுபவங்களும் எழுத்துகளும்.





## அகவிழி திறந்து

**கண்ணன்**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**

பத்திரிகை, பதிப்பகம், லௌகீக வாழ்க்கையில் ஏற்பட்ட தன் அனுபவத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் கண்ணன் சுவையான மொழியில் எழுதிய பத்திகளின் தொகுப்பு 'அகவிழி திறந்து'. 2007 – 2010இல் *காலச்சுவடு* மாத இதழில் இதே தலைப்பில் வெளிவந்தவை இவை.

கூர்மையான அவதானிப்பு, உலகப் பார்வை, உண்மைத் தேட்டம், மொழி நவீனம் ஆகியவற்றோடு சுவை மிகுந்த சொல் முறையும் அகவிழி திறப்பு முயற்சியில் கண்ணனுக்கு உதவுகின்றன. மொழி ஆளுகையில் சித்திரக்காரனின் லாவகம், இழையோடும் குறும்பு, மிகை அற்ற சொற்கள், ஆங்கில வாசனை வீசும் வாக்கிய அமைப்பு ஆகியவை கூடிவந்து, நவீன அல்புனைவு எழுத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவது கண்ணனது எழுத்து.




## வனாந்திரத் தனிப்பயணி

(பத்தி – வாசிப்பு – நேர்காணல்)

**இளம்பிறை**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**

இளம்பிறை தன் திருவாரூர் சாட்டியக்குடி கிராமத்து உழைக்கும் பெண்களை இந்தப் புத்தகத்துள் ரத்தமும் சதையுமாக, உணர்வும் உயிருமாகக் கொண்டுவந்து பேசவும் உரையாடவும் விட்டிருக்கிறார். இந்த நூலின் மிக உயிர்ப்பான பகுதியாக இதை என் வாசக அனுபவமாக உணர்கிறேன். இளம்பிறை சித்தரிக்கும் கிராமம், நம் அரசுகளால் அதிகார வர்க்கத்தால் சுத்தமாகப் புறக்கணிக்கப்பட்ட கிராமமே அல்லாமல், 70கள், 80கள் காலத்துத் தமிழ் சினிமா சித்தரித்த கிராமங்கள் அல்ல. சிவந்த நிறமுள்ள அழகிகள் ஊருக்குள் வருகிற வாத்தியார்களைக் காதலிக்க அங்கே காத்திருப்பதில்லை. அவருடைய குரல். குரலின் தொனி பாசாங்கற்று உண்மையுடன் ஒலிக்கிறது. இத்தன்மைகளே இத்தொகுதியின் பலம்.

## காலச்சுவடு பதிப்பக வைப்பு நிதித் திட்டம்

காலச்சுவடு பதிப்பகத்தில் ரூ. 5000 டெபாசிட் செய்யுங்கள். தீவிர வாசகரான உங்களுக்கு இதில் பல சலுகைகள் உள்ளன.

1. ரூ.1000க்கான காலச்சுவடு வெளியீடுகளை அன்பளிப்பாக உடனே பெற்றுக்கொள்ளலாம்.
2. பின்னர் ஆண்டுதோறும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் ரூ.1000க்கான காலச்சுவடு வெளியீடுகள் உங்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நீங்கள் தேர்வுசெய்யும் நூல்களுக்கான மொத்தத் தொகை 1000 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் எஞ்சுகின்ற தொகைக்கு உரிய நூல்களை அடுத்த ஆண்டிலோ பின்னரோ பெற்றுக்கொள்ளலாம்.
3. ரூ. 5000 வரைவோலையாக அனுப்புங்கள். காசோலையாக இருந்தால் ரூ. 150 வங்கி கமிஷன் சேர்த்து ரூ. 5150 அனுப்புங்கள்.
4. டெபாசிட் காலம் முழுவதும் காலச்சுவடு இதழ்கள் அன்பளிப்பாகத் தொடர்ந்து அனுப்பிவைக்கப்படும்.
5. கடைசியாக நூல்கள் பெற்றுக்கொண்ட ஆண்டிலிருந்து ஒரு ஆண்டுக்குப் பிறகு டெபாசிட் தொகையை முழுமையாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
6. அயலில் வசிப்பவர்கள் ரூ. 10,000 டெபாசிட் செய்தால் ஆண்டுதோறும் ரூ. 1000த்துக்கான நூல்களை விமானத் தபால் வழி பெற்றுக்கொள்ளலாம். கடல் தபால் வழி பெற விரும்புபவர்கள் ரூ. 7,500 டெபாசிட் செய்க. காலச்சுவடு இதழ்களை அயல்நாடுகளுக்கு அன்பளிப்பாக அனுப்ப இயலாது. ஒரு இந்திய முகவரிக்கு அன்பளிப்பாக அனுப்பிவைக்கலாம்.
7. **காலச்சுவடு பதிப்பகம் ICICI நாகர்கோவில் வங்கிக் கணக்கு எண் 609505010967**

# அரசியல்



## அதிகாரத்தின் வாசனை

**கண்ணன்**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**

கண்ணன் பத்திகளாகவும் தனிக் கட்டுரைகளாகவும் எழுதியவையே இந்நூலின் உள்ளடக்கம். 2005 முதல் 2011 வரையான காலப் பகுதியில் உலகிலும் இந்தியாவிலும் தமிழகத்திலும் நிகழ்ந்த அரசியல் நடவடிக்கைகளின் ஆதாரமான பண்புகளை அம்பலப்படுத்துகிறது இந்நூல்.

ஆ.ராசா வேட்டையாடப்படுவது அவர் தலித் என்பதனால் என்பது ஒரு தற்காப்புவாதம். ராசாவை ஊழலுக்குத் தூண்டி விட்டு அவரது சாதி அடையாளத்தைச் சுரண்டி ஆதாயங்கள் கொய்யப்படுகின்றன என்பது இந்நூலிலுள்ள புலனாய்வுக் குறிப்பு. தலித் அடையாளத்தை ஊழலில் புதைக்கும் அரசியலிலிருந்து மீட்பது ஒடுக்கப்பட்ட மக்கள் முன் இன்று இருக்கும் சவால் என்பது ஆசிரியர் கூற்று.

மதச்சார்பின்மை, மனித உரிமைகள், இடதுசாரிக் கண்ணோட்டம், கலை – பண்பாடு, ஊடகங்கள், நடைமுறை அரசியல் என்று எல்லாத் தரப்புகளிலும் நிகழும் அரசியல் செயல்பாடுகளின் நுண் அரசியலை இனங் காட்டுகிறது இந்நூல். நோயையும் நோயின் மூலத்தையும் சுட்டுவதோடு அதைத் தீர்க்கும் மாற்று வழியையும் முன்வைக்கிறது என்பதே இந்த நூலின் பயன்மதிப்பு.

## தமிழக அரசியல்

காலச்சுவடு கட்டுரைகள் (2001 – 2011)

தொ-ர். : **கண்ணன்**

**ரூ. 350 (வி.பி.பி.யில் ரூ. 350)**




2008ஆம் ஆண்டு காலச்சுவடு 100ஆம் இதழ் வெளிவந்த நிலையில் திமுக அரசாங்கம், அரசு நூலகங்களில் அதைத் தடைசெய்தது. தடையை எதிர்த்து இந்திய அளவில் பல எழுத்தாளர்கள் குரல் கொடுத்தார்கள். உயர்நீதிமன்றம் 2010இல் இதழை மீண்டும் நூலகத் துறை வாங்கிட உத்தரவு பிறப் பித்தது.

இந்தப் பின்னணியில் தமிழக அரசியல் சார்ந்த காலச்சுவடின் பார்வை என்ன? இதழ் தடைசெய்யப்படுவதற்கான காரணிகள் என்ன? போன்ற கேள்விகளுக்கான விடையை வாசகர் உருவாக்கிக் கொள்ள விரிவான சான்றுகளை இத்தொகுப்பு முன்வைக்கிறது. 2001 – 2011 வரை காலச்சுவடில் வெளிவந்த முக்கியமான அரசியல் பதிவுகள் இதில் உள்ளன. மேலும் விரிவான ஆய்வுக்காக காலச்சுவடில் வெளிவந்த அனைத்து அரசியல் பதிவுகளின் முழுமையான பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது.

அதிகாரத்திடம் உண்மையை பேசிய குரல்கள் இவை. விற்பனையில் தமிழக இதழியலின் வெளிவட்டத்தில் இருக்கும் ஒரு இதழ், கருத்துருவாக்கத்தில் அதன் மையத்தில் செயல்பட்ட வரலாறு இது.

## சாதியம்: கைகூடாத நீதி

சமூக – அரசியல் விமர்சனக் கட்டுரைகள்

**ஸ்டாலின் ராஜாங்கம்**

**ரூ. 120 (வி.பி.பி.யில் ரூ.120)**




தலித் வாழ்வு சார்ந்த உரையாடல்கள் அவற்றின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் தருணம் இது. ஒடுக்குமுறைகளின் நுட்பமான வடிவங்களை அடையாளம் காண்பதும் அவற்றை அம்பலப்படுத்துவதும் அவற்றுக்கெதிரான போராட்டங்களை ஒருங்கிணைப்பதுமான தலித் இயக்கங்கள், அறிவுஜீவிகளின் செயல்பாடுகள் நம் ஜனநாயக அமைப்பின் போதாமைகளை உணர்த்துபவையாகவும் திட்டவட்டமான மாறுதல்களைக் கோருபவையாவும் புதிய வீச்சுகளுடன் மேலெழுந்து வருகின்றன.

ஸ்டாலின் ராஜாங்கத்தின் இந்த நூல் அத்தகைய தீவிரமான அறிவுத்துறைச் செயல்பாட்டின் ஒரு பகுதி. கடந்த பல ஆண்டுகளில் தலித் சமூகத்தின் மீது தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுவரும் வன்முறைகளையும் தலித் சமூகம் எதிர்கொண்டு வரும் புறக்கணிப்புகளையும் அவமானங்களையும் அவற்றுக்குக் காரணமான சாதி ஆதிக்கத்தையும் நுட்பமாகப் பதிவு செய்திருக்கும் இந்நூல் தமிழக அரசியல் கட்சிகள், தலைவர்களின் சந்தர்ப்பவாத நிலைபாடுகளைத் துணிச்சலுடன் அம்பலப்படுத்தவும் முயன்றிருக்கிறது. காவல்துறை, நீதிமன்றங்கள், அரசு அதிகார மையங்களின் அருவருப்பான நடைமுறைகளைக் கடுமையாக விமர்சிக்கும் ஸ்டாலின் ராஜாங்கம் சமரசமற்ற கூர்மையான விமர்சனங்களின் வழியாகவும் மறுக்க முடியாத ஆதாரங்களை முன்வைப்பதன் மூலமும் இந்த நூலை ஒரு போர்க் கருவியாக மாற்ற முயன்றுள்ளார்.

## ஆய்வு

### தலித்துகளும் தண்ணீரும்

**கோ. ரகுபதி**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**





நீர் புழங்கும் வெளிகளில் சக மனிதர்களுடன் தண்ணீரைப் பகிர்வதில் மூர்க்கம் காட்டும் ஆதிக்க மனநிலை, மனிதத்தின் புதைமேட்டில் ஆர்ப்பரிக்கிறது. ஆயினும் பொது உளவியலில் வலிமையற்றவர்களாகக் காட்டப் படும் தலித்துகள் உரிமைக்கான தாகத்துடன் போரிடுவதை வர லாற்று ரீதியாக இந்நூல் சுட்டு கிறது. மேலும் அதிகாரத்தின் இரண்டகத்தையும் அதிகாரத்துக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த தலித் பிரதிநிதிகளின் செயலையும் சுய விமர்சனம் செய்கிறது. சாதியம் தொடர்பான ஆய்வுகள் பெரிதும் ஆங்கிலத்தில் அமைய, ஒருபொருள் குறித்து விரிவான ஆய்வாகத் தமிழில் இந்நூல் வெளிவருகிறது.

### மாமல்லபுரம்: புலிக்குகையும் கிருஷ்ண மண்டபமும்

**சா. பாலுசாமி**

**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




மாமல்லபுரம் சாளுவன் குப்பத்தி லுள்ள புலிக்குகை உலகக் கலை வெளியில் வேறெங்கும் காண வியலாத விந்தையான படைப்பு. எத்தனையோ விளக்கங்களை இதுவரை பெற்றுள்ள இப்புதுமைச் சின்னம், சிவனுக்கும் துர்க்கைக்கு மான கூட்டுக் கோயில் என்பதை யும் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களை யும் பிற உயிர்களையும் கண்ணன் காத்த கிருஷ்ண மண்டபச் சிற்பத்தொகுதி, சங்க இலக்கிய முல்லைத் திணைப் பாடல்களை உள்வாங்கிய படைப்பு என்பதையும் மாமல்லைக் குன்றையே கோவர்த்தனமாகச் சமைத்த வியக்கவைக்கும் ஓர் அற்புத இயங்கு சிற்பம் (Dynamic Sculpture) என்பதையும் இந்நூல் நிறுவுகிறது.

## வரலாறு

### வலை உணங்கு குருமணல்

குருநகர் மக்கள் வரலாறு, பண்பாடு


**மு. புஷ்பராஜன்**

**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




யுத்தத்தால் சின்னாபின்னப்பட்டுப் போன ஒரு கடற்கரைச் சிற்றூரை யும் அங்கு வாழும் மக்களின் வாழ் வியலையும் ஒரு வித ஏக்கத்துடன் தான் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இப் பதிவை அவர் மேற்கொண் டிராவிட்டால் ஓர் ஊரின் வரலாறு உலகிற்குத் தெரியாமல் போயிருக் கும். அதற்காகக் குருநகரின் இன் றையத் தலைமுறையும் எதிர்காலத் தலைமுறையும் மட்டுமின்றி நாமும் கூட ஆசிரியருக்கு நன்றி சொல்லி யாக வேண்டும். தென்தமிழ் நாட்டுக் கத்தோலிக்க மீனவர் களின் வாழ்வியலைப் பதிவு செய்ய விரும்புவோருக்கு இந் நூல் வழிகாட்டியாக அமையும் தன்மையது.

## உணவு/மருத்துவம்




### அமுதே மருந்து

அற்றது போற்றி உணின்

**டாக்டர் எல். மகாதேவன்**

**ரூ.290 (வி.பி.பி.யில் ரூ.290)**

மூன்றாண்டுகளில் ஐந்து பதிப்புகள் கண்ட 'உணவே மருந்து' நூலின் இரண்டாம் பாகம் இந்நூல். உடலை அன்னமய கோசம் என்று அழைக் கிறோம். இந்த அன்னமய கோசத் தைப் பாதுகாக்க முறைப்படி உண்ணுதல் என்பது அவசிய மாகிறது. சாப்பிட்ட உடனே சாப்பிடுதல் எனும் அத்யசனம், ஆகார விதிகளை மதிக்காமல், கை, கால் கழுவாமல், காலம் தவறி பாடிக்கொண்டு, சிரித்துக்கொண்டு உண்ணும் விஷமா சனம் தவிர்க்கப்பட வேண்டும் என்று சாஸ்திரங்கள் போதிக் கின்றன. இறைவன் உணவைச் செமிக்கின்ற அக்னி வடிவ மாக வைச்வானரனாக இருக்கிறான் என்று இந்து சமய அற நூல்களும் போதிக்கின்றன. இந்நூலில் பண்டையத் தமிழரின் உணவு, உணவுப் பழக்கம், ஐவகை நிலங்களில் விளையும் உணவுகள், உணவுப் பொருட்களின் தனிப்பட்ட குணங்கள், சமையல் குறிப்புகள் போன்ற விவரங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.


முன்னூறுக்கும் மேற்பட்ட உணவு வகைகள் தயாரிக்கும் முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

# திரை

## திரைவழிப் பயணம்

**உமா ஷக்தி**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




திரைப்படம் பார்வைக் கலை. எனினும் திரைப்படம் பற்றிய எழுத்துக்களுக்கு வாசகரைக் கவரும் குணம் உண்டு. திரையைப் பற்றிய எழுத்துக்கள் திரைப்படக் கலையை மேலும் விரிவாகவும் நுட்பமாகவும் புரிந்து கொள்ள உதவுகின்றன. அவையே திரைப்பட ரசனையைக் கட்டமைக்கின்றன. உலக சினிமா பற்றிய பதினான்கு ரசனைக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

சத்யஜித் ரே, டேவிட் லீன், மஜீத் மஜீதி, ஃபெட்ரோ ஆல்மதோவர் முதலிய உலகப் புகழ்பெற்ற இயக்குநர்களின் படங்களைப் பற்றிய கட்டுக்ரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. எளிய மொழியில் சுவாரசியமான சிறுகதையை வாசிப்பது போன்ற நடையில் இந்த நூலை எழுதியுள்ளார் உமா ஷக்தி.


# ஆன்மீகம்

## சிவாலய ஓட்டம்

ஒரு பாதயாத்திரையின் ஆன்மீக வரலாறு

**அ.கா. பெருமாள்**

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ.190)**




சைவசமய விழாக்களில் முக்கியமானதாகக் கருதப்படும் சிவராத்திரி விழாவின்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பக்தர்கள் இரவு முழுக்க 108 கி.மீ. தொலைவு நடந்து சென்று பன்னிரண்டு சிவன் கோயில்களைத் தரிசிக்கும் நிகழ்வையும், அக்கோவில்களையும் பற்றிய வரலாற்று நூல் இது. பக்தி என்ற எல்லையைத் தாண்டி கோவில்களின் சமூகப் பின்னணியையும் கலைநுட்பங்களையும் விவரிப்பது இந்நூலின் சிறப்பு. தமிழகத்தில் இதுபோன்ற ஒரு யாத்திரை கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே நிகழ்கிறது.

# பிற




## தமிழர் உணவு

(உணவு பற்றிய கட்டுரைகள்)

தொ-ர்.: பக்தவத்சல பாரதி

**ரூ. 250 (வி.பி.பி.யில் ரூ.250)**

*காலச்சுவடு* செப்டம்பர் 2005 இதழ் தமிழர் உணவுச் சிறப்பிதழாக வெளிவந்தது. இன்றுவரை வெளிவந்த *காலச்சுவடு* இதழ்களிலேயே பெரும் கவனத்தையும் வரவேற்பை யும் பெற்ற இதழ் என்று அவ்விதழைச் சொல்லலாம். அச்சிறப்பிதழில் உள்ள கட்டுரைகளை விரிவுபடுத்தி மேலும் சில கட்டுரைகளை இணைத்து நூலாக்கும் பணியை பேரா. பக்தவத்சல பாரதி ஏற்றுக்கொண்டார். அவரின் ஐந்து ஆண்டு கால முயற்சியில் உருவானது இந்நூல்.

தமிழகச் சமையல் முறைகளுடன் ஈழம், புலம்பெயர் உணவு முறைகளும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. படைப்பாளிகள், ஆய்வாளர்கள் பலரும் நுட்பமான பார்வையுடன் தமிழர் உணவின் பல்வேறு பரிமாணங்களை அணுகியிருக்கிறார்கள். தமிழ்ச் சமூகத்திற்கென தனித்துவமான உணவு முறைகளும் உணவு விலக்குகளும் உண்டு. ஏனைய பண்பாடுகளுடன் உறவாடி, கொண்டு கொடுத்தல் செய்து பல வகை தானியங்கள், பயிர்வகைகள், காய்கறிவகைகள் தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகமாகியுள்ளன. இந்த தனித்துவமும் பொதுத்தன்மையும் கொண்ட மரபு உலகமயமாக்கலினால் பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. உணவு, உணவு முறை, உணவுப் பண்பாடு குறுகிய காலத்தில் பலத்த மாற்றத்திற்கு ஆட்பட்டு வருகின்றது. இந்தப் பின்னணியில் பல சுவாரசியமான தகவல்கள், உணவு வகைகள், பண்பாட்டுக் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்நூல் தனி முக்கியத்துவம் பெறுகிறது.


## உண்மையும் பொய்யும்

(கேள்வி - பதில்)

**வைக்கம் முகம்மது பஷீர்**

தமிழில்: **குளச்சல் மு. யூசுப்**


**ரூ. 175 (வி.பி.பி.யில் ரூ.175)**




வைக்கம் முகம்மது பஷீரின் கேள்வி – பதில்களின் தொகுப்பு இந்நூல். பஷீரின் புத்தகங்களில் மிக மிக எளிமையானதும் அதே சமயம், மிக மிகத் தீவிரமானதுமாக இந்த நூல் இருக்கலாம். கேரள வாழ்க்கை பற்றிய அவதானிப்புகளும் கருத்துகளும் விமர்சனங்களும் இந்தக் கேள்வி – பதில்களில் அடங்கியிருக்கின்றன. கேரள வாழ்க்கையை பற்றியவை மட்டுமல்ல இந்திய, உலக, பிரபஞ்ச வாழ்க்கை பற்றியவையாகவும் இருப்பதைக் காணலாம்.

# தமிழியல் - காலச்சுவடு வெளியீடு

## பாலைகள் நூறு




(சிறுகதைகள்)

**அ. இரவி**

**ரூ. 250 (வி.பி.பி.யில் ரூ. 250)**

மரங்கள் யாவும்
இலைகளை இழந்திருந்தன.
இனி,
அடுத்த வசந்தம் வரும்வரை
காத்திருக்க வேண்டியதுதான்.
இலைகளை இழந்த மரங்கள்,
மேகங்களைக் கூட்டி அப்புறப்படுத்த,
விளக்குமாறாக நின்றன.
பிறகுதான்
சூரியன் மெதுவாகத் தயங்கி,
முகில் புகாரினூடாக எட்டிப்பார்க்க முயலும்.
சூரியனை முழுமையாக இங்குதான் கண்டேன்.
திரண்டெழுந்த பனிப்புகார்களின் இடையே
அதன் வட்டவடிவமான வெள்ளிவிளிம்புகளுடன்
சூரியனைக் கண்ணில்
எந்தக் கூச்சமுமின்றிக் கண்டேன்.

எனினும்,
என் மனதில் சிறிது குழப்பம்தான் எஞ்சுகிறது.
என்மேல் துயர் படிந்திருக்கிறது.
நகரம் முழுவதும், வீதிகள் வரையும்,
புல்வெளிகள் யாவும்,
சிறு மரம் செடிகொடிகள் மேலும்,
கூரைகளிலும், காரின் மேற்கூரைத் தகட்டிலும்,
சுண்ணாம்பு பூசியதுபோலப்
பனித்துகள்கள் படிந்திருக்கக் கண்டேன்.
அவ்வாறே நானும் ஆகினேன்.
ஒன்றும் பேசாமல் மொட்டைமரமாக,
பனிக்காலத்து மரமாக
நானும் நிற்க விரும்பினேன்.

# 2011 காலச்சுவடு அறக்கட்டளை வெளியீடு

## நெஞ்சில் ஒளிரும் சுடர்

சுந்தர ராமசாமி பற்றிய நினைவுகள்

**கமலா ராமசாமி**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**




சுந்தர ராமசாமியுடன் வாழ்ந்த ஐம்பதாண்டுக் காலத்தின் அனுபவங்களை இந்த நூலில் முன்வைக்கிறார் கமலா ராமசாமி. ஓர் இலக்கிய ஆளுமையின் வாழ்க்கைத் துணைவி என்ற நிலையைக் கடந்து கமலா ராமசாமி துல்லியமான அவதானிப்பாளராகவும் இந்தக் குறிப்புகளில் தெரியவருகிறார். பிறந்த ஊரான கடம்போடுவாழ்வில் கழித்த இளம் பருவத்தை நினைவு கூரும்போது அந்த ஊரும் அந்நாளைய மனிதர்களும் அந்தக் காலகட்டமும் மீண்டு வருகிறது. சுந்தர ராமசாமியின் மனைவியான பின்னர் நாகர்கோவில் வாழ்வில் பெற்ற அனுபவங்களையும் நேர்த்தியுடன் மீட்டெடுக்கிறார். சு.ராவின் இலக்கியச் செயல்பாடுகளும் தனி வாழ்க்கை அக்கறைகளும் கமலாவின் வருகையால் செழுமைபெற்றதை மிகையற்ற விவரங்களாக நாம் வாசிக்கிறோம். கடம்போடுவாழ்வைச் சேர்ந்த ஒரு வெகுளிப் பெண் நம் காலத்தின் பெரும் இலக்கிய ஆளுமையின் சக உயிராக மாறும் அமைதியான விந்தையை இயல்பாகக் காண்கிறோம்.

தமிழ் இலக்கியச் சூழலில், செல்லம்மா பாரதியின் நூலுக்குப் பிறகு இலக்கியவாதியான கணவரைப்பற்றி மனைவி எழுதிய நூல் இந்த நூலாகவே இருக்கலாம்.

காலச்சுவடு இதழ் எண் 26, ஜூலை – செப்டம்பர் 1999 முதல்
ஆகஸ்ட் 2011, இதழ் எண் 140வரை
தொகுப்புகளாக (லெதர் பைண்டிங்) கிடைக்கும்.

**நான்கு இதழ்கள் கொண்ட தொகுப்பிற்கு**
**விலை: ரூ. 150**